# காஞ்சி

ஆசிரியர்
அண்ணாதுரை



12-6-66

விலை 20 காசு

# கேள்வி--பதில்!

**(1) ராஜகோபாலாச்சாரியாருடன் கூடிக்குலவுவதால் திராவிட முன்னேற்றக் கழகம் கெட்டுப் போய்விடும் என்று கூறுகிறார்களே? அதுபற்றி என்ன எண்ணுகிறீர்?**

கூறுகிறார்களே என்று சொல்வதிலிருந்தே, கூறுபவர்கள் இன்னார், இன்ன கட்சியின் தலைவர், இன்ன விதமான யோக்யதை உள்ளவர், என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை என்று தெரிகிறதல்லவா? அப்படிப் பட்டவர்களின் பேச்சை மதிக்கத்தக்கதாகக்கொள்ளமுடியுமா; போகட்டும், ராஜகோபாலாச்சாரியாருடன் சேர்ந்தால் தி. மு. கழகம் கெட்டுப்போய்விடும் என்பது உண்மையாக இருக்குமானால், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாருடனும் வெங்கட்ராமனுடனும்சேருவதால் காங்கிரஸ் கட்சி கெட்டுவிடுமே. நமக்காகச் சொல்லும் யோசனையை அந்த நாணயவான்கள் காங்கிரஸ் தலைவர் காமராஜருக்கும் சொல்லலாம் அல்லவா! சொல்லுகிறார்களா?

**(2) சோவியத் ரஷியா உலகப் போர் கூடாது என்பதிலே உண்மையிலேயே அக்கறை கொண்டிருக்கிறதா?**

ஆமாம்! அதனால்தான் பொது உடைமைக் கொள்கையை எதிர்த்து நிற்கும் அமெரிக்காவுடன்கூட, உலக சமாதானத்துக்காக ஒத்துழைக்க விருப்பம் தெரிவித்திருக்கிறது. சந்திரமண்டலத்தைப் போர்த்தளமாக்கக் கூடாது! என்ற சிறந்த யோசனையைக் கூறி இருக்கிறது.

**(3) அணுகுண்டுத் தயாரிக்க வேண்டும் என்ற வற்புறுத்தல் அதிகமாகிக்கொண்டு வருகிறதாமே, உண்மையா?**

ஆமாம்! காங்கிரஸ் கட்சியிலேயே பலர் வலியுறுத்துகிறார்கள். அவர்களும் தெளிவு பெறும்படி அணுசக்தி உற்பத்தி நிலையத்தின் புதிய தலைவர் சாராபாய் ஓரிரு அணுகுண்டு தயாரிப்பதன் மூலம் நாட்டுக்கு வலிவும் பாதுகாப்பும் தேடிட முடியாது. உண்மையான பாதுகாப்பு, நாட்டின் விஞ்ஞான தொழில்நுட்ப அடித்தளம் அமைப்பதே என்று கூறி இருக்கிறார். அந்த அடித்தளம் அமைக்காமல், ஓரிரு அணுகுண்டு தயாரிப்பது வெறும் 'காகிதப்புலி'யாகிவிடும் என்றும் கேலியாகக்குறிப்பிட்டிருக்கிறார்.

**(4) நேர்த்தியான இசைப் புலமை உள்ள கே. ஆர். ராமசாமி ஏன் தேர்தல் பிரசார 'காலட்சேபம்' நடத்தக் கூடாது?**

என் மனதில் தோன்றுவதையே உமது கேள்வியும் எடுத்துக் காட்டுகிறது. அவருக்கே அந்த யோசனையைக் கூறிப் பார்ப்பதுதானே.

**(5) இந்திராகாந்தி அவர்கள் சென்று வந்ததால், அமெரிக்காவின் நல்லெண்ணம் நிரம்பக் கிடைத்திருக்கிறதாமே, உண்மையா?**

சொல்லுகிறார்கள் அப்படித்தான். ஆனால் அமெரிக்காவின் போக்கு மாறியிருப்பதாகத் தெரியவில்லை. பாகிஸ்தானுடன் கலந்து பேசி ஒப்பந்தத்துக்கு வராமலேகூட, இந்தியா தானாகவே பாகிஸ்தானுடன் வியாபார உறவுகொள்ள முடிவு செய்தது இரண்டு வாரங்களுக்கு முன்பு. இதைக்கூட, இந்தியாவின் பெருந்தன்மை என்று பாராட்ட அமெரிக்காவுக்கு மனம் இல்லை. மாறாக, அமெரிக்க இதழ்கள், இந்தியா, ஏதோ பெருந்தன்மையாக நடந்துகொள்வதுபோல பாசாங்கு செய்கிறது, ஆனால் சுயநலத்துடன்தான் வியாபாரத் தொடர்புகொள்கிறது. ஏனெனில் பாகிஸ்தானிடமிருந்து பெற்றுள்ள சணல் கல்கத்தா ஆலைகளில் குவிந்துகிடக்கிறது. வியாபாரத் தடை நீக்கம் செய்தாலொழிய அந்தச் சணலை உபயோகிக்க முடியாது. அதற்காகவே இந்தியா, பாகிஸ்தானுடன் வியாபார உறவைத் துவக்கியிருக்கிறது என்று குத்தலாகவே எழுதி உள்ளனவே. இந்திரா காந்தியார் மாலைமரியாதையுடன் வரவேற்கப்பட்டார்; ஆனால் அமெரிக்காவின் மனம் மாறி இருப்பதாகத் தெரியக்காணோம்.

**(6) சிலர் எந்த அரசியல் கட்சியிலும் சேர்ந்து பணியாற்றாமல் இருக்கிறார்கள்; ஆனால் அரசியல் துறையில் அறிவுரை கூறுகிறார்களே அது ஏன்?**

உமது கேள்வியிலேயே பதில் இருக்கிறதே! எல்லோருக்கும் அறிவுரை கூறத்தான் அவர்கள் எத்தக் கட்சியிலும் சேரவில்லை. சேர்ந்தால் எல்லாக் கட்சிகளையும் கண்டிக்கத் தக்க அளவு 'பேரறிவாளராக' இருக்க முடியுமா!

**(7) காங்கிரசில் உள்ளவர்களையும் (காமராஜர் தவிர) கண்டிக்கிறார், காங்கிரசுக்கும் ஓட்டுப் போடச்சொல்லுகிறாரே பெரியார் அதுஎன்ன போக்கு?**

அது பெரியார் போக்கு! பெரிய கலியாண வீட்டிலே பார்த்திருக்கலாமே, வாழை மட்டையாலே அடிப்பார் பெரிய தனக்காரர் விருந்துக்கு அலையும் பேர் வழிகளை. நாலுதடவை மட்டையால் அடித்துவிட்டு, கடைசியில் போய்த் தின்னுத் தொலை என்று உத்திரவிடுவார். அது போலப் பெரியார், அடி அடி என்று காங்கிரசின் போக்கை, பக்தவத்சலம் போன்றோரை அடித்துவிட்டு, கடைசியில் ஒரு வார்த்தை, ஓட்டுப் போட்டுத் தொலையுங்கள் காங்கிரசுக்கு என்று சொல்லுகிறார். அந்த ஒரு சொல்லுக்காக, பாவம் காங்கிரசார், பெரியார் தரும் அடியை வாங்கிக் கட்டிக்கொள்கிறார்கள்.

**(8) பக்தவத்சலம் அவர்களும் காங்கிரஸகாரர், காங்கிரஸ் கட்சியை ஆதரித்துக் கொண்டே அவரைமட்டும் அழிப்பேன் ஒழிப்பேன் என்று பேசுவது சரியல்ல என்று பெரியாரிடம் காமராஜர் சொன்னால் என்ன?**

தீர்ந்தது. நீயும் கெட்டுவிட்டாய் எனக்கே புத்தி சொல்ல வந்துவிட்டாயா! இதைத்தான் வளர்த்தகடா மார்பில் பாய்வது போல என்பார்கள். போ! போ! உன் நட்பே வேண்டாம்! நீயும் ஒழிக! உன் காங்கிரசும் ஒழிக!! என்று பெரியார் பேச ஆரம்பித்துவிடுவார்.

### கருணை

நேசிக்கப்படுவதற்கான தகுதி ஒவ்வொருவருக்கும் ஓரளவு உண்டு; அதற்கு மேலேயே அவர்களிடம் அன்பு காட்டுவதுதான் கருணை என்பதாகும்.

—ஜூபர்.

காஞ்சி

மலர் 2 12–6–66 இதழ் 46

# பெல்ஜியத்தில்

புத்தர் பிறந்த புனித நாடு! காந்தியார் அவதரித்த திருநாடு! நேரு பெருமகனார் ஆண்ட பொன்னாடு! மலை வளமும் கடல் வளமும் நிலவளமும் நீர்வளமும் தன்னகத்தே கொண்ட நாடு! பொன் விளையும் பூமி!!

இன்றோ அங்கு பசி, பட்டினி, பஞ்சம்!

பல கோடிக்கணக்கான மக்கள் உண்ண உணவின்றித் தவிக்கிறார்கள்; பட்டினி கிடந்து நடமாடும் பிணமாக உள்ளனர்.

உணவு கிடைக்காததால் உருக்குலைந்து போகிறார்கள் அந்த நாட்டு மக்கள்.

மனித இனத்திலே ஒரு பகுதியினர் இப்படித் தத்தளிப்பதை நாம் பார்த்துக்கொண்டு வாளாயிருக்கலாகுமா? நாம் இதயம் படைத்தவர்கள்; ஏசுவின் சுவிசேஷம் பயின்றவர்கள்; ஆகவே, நாம், இம்சைக்கு ஆளாகிக் கிடக்கும் இந்திய மக்களுக்கு நம்மாலான உதவியைச் செய்திட வேண்டும்; கர்த்தரின் அருள் நமக்குக் கிடைக்கும்; கிருத்தவர்களின் பண்பினை உலகு உணரும்.

ஆகவே சிறுவர்களே! சிறுமியர்களே! கருணை காட்டுவீர்! உங்களிடம் உள்ள காசுகளை உண்டியலில் போடுவீர்! அந்தப் பணத்தை அனுப்பிவைப்போம்; பசிக் கொடுமையை ஒழித்திடும் முயற்சியில் நமது பங்கினைச் செலுத்துவோம்; பரமன் அருள் பாலிப்பார்.

இவ்விதம் உருக்கமாகப் பேசுகின்றனர், பெல்ஜியம் நாட்டிலே. அங்கு உள்ள 25000 பள்ளிக்கூடங்களிலேயும் பெரியவர்கள் இதுபோலப் பேசி, மாணவ மாணவியரிடம் நிதி திரட்டுகிறார்கள்.

'இந்தியா தினம்' என்று ஒரு தனிநாளே நடத்துகிறது பெல்ஜியம்.

இந்தவிதமான அன்புணர்ச்சி காட்டப்படுவதற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதுதான் முறையென்றாலும், இன்னலைத் துடைத்திட வெளிநாடுகள் இதுபோல முன்வருவது காண ஒரு மகிழ்ச்சிகூடப் பிறந்திடும் என்றாலும், நாடு எத்தகைய நலிவுற்ற நிலையிலே இருக்கிறது என்பது உலகு எங்கும் பேசப்படுவது, ஒருவிதத்திலே இழிவை மூட்டிவிடுமே என்றெண்ணும்போது வருத்தமாகவே இருக்கிறது.

பெல்ஜியத்து மாணவ மாணவியர், உள்ளம் உருக்கும்விதமான பேச்சினைக் கேட்டு, நன்கொடை தந்திடுவர் என்றபோதிலும், இன்று இந்த நிலை வந்துற்றதற்குக் காரணம் என்ன என்றும் எண்ணிடத்தானே செய்வார்கள்! அப்போது இன்று நாட்டை யார் ஆளுகிறார்கள் என்ற கேள்வி எழத்தானே செய்யும். நாட்டை ஆள்பவர் காங்கிரஸ் கட்சியினர் என்பதனை அறிந்திடுவரன்றோ. அறிந்திடும்போது, அந்தக் கட்சியை மதித்திடவா செய்வர்; போற்றிடவா செய்வர்.

செல்வம் கொழிக்கும் நாட்டில், ஒரு ஆண்டு மழை போதுமான அளவு பெய்யாததால் வந்துற்ற இன்னலைப் போக்கிக்கொள்ளும் வழிவகையைக் கூடவா, 'விருது' பெற்றுள்ள காங்கிரசாட்சி ஏற்படுத்திக் கொடுத்திட முடியவில்லை என்று கேட்கமாட்டார்களா?

மகாராஜாக்களும் ராஜாக்களும், டாட்டா பிர்லா போன்ற கோடீஸ்வரர்களும் பணக் கோட்டை கட்டிக் கொலுவீற்றிருக்கின்றனரே, அவர்களிடம் முடங்கிக் கிடக்கும் செல்வத்தை ஏன் காங்கிரஸ் சர்க்கார் கேட்டுப் பெற்றிடக் கூடாது; பெல்ஜியத்திலா நன்கொடை திரட்டிட வேண்டும் என்று கேட்டிட மாட்டார்களா?

பசியும் பட்டினியும் வாட்டிட, ஏழை மக்கள் துடிதுடித்துக் கிடந்திடும் நிலையிலும், ஆடம்பரமும் பகட்டும் கொண்ட வாழ்க்கையிலே அங்கு ஒரு சிலர் புரளுகின்றனரே, எப்படி அந்த அக்ரமத்தை அனுமதிக்கின்றனர் என்று கேட்கமாட்டார்களா?

பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடுவதற்குப் போதுமான மழை பெய்யாதது ஒரு காரணமாக இருக்கிறது என்றாலும், கிடைத்திடும் பண்டத்தையும் கூடக் காதகர் பதுக்கிவைத்து கள்ளச் சந்தையில் விற்று இலாபம் பெற்றுக் கொழுத்திடுகின்றனர் என்பதுபற்றிப் பேசிக்கொள்ள மாட்டார்களா?

மழையைத்தான் தருவிக்க முடியாது; வஞ்சகர்களை அடக்கிடவா முடியாது; அதற்குப் போதுமான வலிவுகூடவா இல்லை என்று கேட்கமாட்டார்களா?

மானம் பெரிதா சோறு பெரிதா என்று இங்கு ஒலிப்பதிவு நடாத்துகின்றனர்.

பெல்ஜியம் வரையில் பரவிவிட்டிருக்கிறது ஆட்சியின் பெருமை!!

சிறுவரும் சிறுமியரும் காசு திரட்டித் தருகின்றனர், இந்த நாட்டுக்கு.

எமது ஆட்சியின் காரணமாகவே இந்தியாவின் புகழ் எட்டுத் திக்கும் பரவி இருக்கிறது என்று பெருமை பேசிடத் தவறுவதில்லை காங்கிரசின் தலைவர்கள்.

அந்தப் பெருமை பெல்ஜியம்வரை பரவி இருக்கிறது!!

கடலில் மிதந்திடும் கலத்தில் விருந்து, காங்கிரசின் தலைவர்களுக்கு; அ.இ.கா.க. கூட்டத்தை ஒட்டி.

தலைவர்கள் தனிச்சுவை விருந்துண்ணுகிறார்கள், மக்களோ பட்டினி கிடக்கிறார்கள். அந்த மக்களுக்காக நிதி திரட்டும் பெல்ஜியத்து மாணவர்கள், பம்பாய் நடாத்திய 'படாடோப' விருந்து பற்றியும், அதிலே 'கனம்கள்' கலந்துகொண்டது பற்றியும் பேசிக்கொள்ளாமலா இருப்பார்கள்? என்ன பேசிக்கொள்வர்? கூறிடவே கூச்சமாக இருக்கிறது!!




## நான்காம் பகுதி

## காதல் ஓலையா?

'அவர் பார்த்து விட்டால் என்ன— அதற்காக இப்படியா நடுங்கவேண்டும்?'' என்று குலசேகரன் நிதானமாகக் கேட்டான்.

''நாம் இருவரும் பேசிக்கொண்டிருப்பதை அல்லவா அவர் பார்த்து விட்டார்! இதோ நம்மை நோக்கி வந்துகொண்டிருக்கிறாரே!''

''இவருக்கும் உனக்கும் என்ன தொடர்பு? எத்தனை நாள் பழக்கம்? என்றெல்லாம் கேட்பாரே! அவற்றிற்கெல்லாம் நான் என்ன பதில் சொல்வது அரசே?'' என்று சிறிது தூரத்தில் செடிகளைத் தள்ளிக்கொண்டு நடந்துவந்த அறிவொளி அடிகளைப் பார்த்தபடி, 'அச்சக் கோடுகள் முகத்தில் பின்னல் போட அஞ்சலை கேட்டாள்.

''அரசே என்றெல்லாம் அழைக்காதே, அஞ்சலை! பூஞ்சோலை என்றே கூப்பிடு! அறிவொளியடிகளுக்குக்கூட நான் யார் என்பது தெரியக்கூடாது.

முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக்கொண்டு, 'சரி' என்று அஞ்சலை சொல்லி முடிப்பதற்கும், அறிவொளி அடிகள் அவர்கள் அருகே வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

''வணக்கம், அடிகளே!'' என்று குலசேகரன் பயபக்தியோடு இரு கரங்களையும் கூப்பினான்.

''வாழ்க!'' என்று அறிவொளி அடிகள் புன்னகை தவழும் முகத்தோடு கூறிவிட்டு, அஞ்சலையின் பக்கம் திரும்பி, 'இந்தத் தம்பியை உனக்கு முன்பே தெரியுமா?' என்று கேட்டார்.

''இரண்டு மூன்று முறைகள் இவர் எங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறார்!'' என்று சொல்லி பெரியார் ஒருவரிடம் பொய் சொல்கிறோமே என்ற வருத்தத்தோடு உமிழ்நீரைக் கூட்டி விழுங்க முயன்றாள். தொண்டைக் குழியைத் தாண்டிச் செல்ல, அது மிகவும் சிரமப்பட்டது.

''உன் வீட்டிற்கு வந்திருக்கிறாரா?''

''ஆமாம்'' என்று அவள் பதிலளித்த அதே நேரத்தில் அடிகளின் மனதில் ஏதோ சந்தேகம் வந்துவிட்டது போலிருக்கிறதே என்ற அச்சமும் உண்டாயிற்று. ஆகவே முதல் பொய்யை நம்பும் படியாகச் செய்ய இரண்டாம்பொய் ஒன்றையும் துணைக்கு அழைத்துக் கொண்டாள்.

''என் அண்ணாவிற்கு மிகவும் வேண்டிய நண்பர்களில் இவரும் ஒருவர்'' என்று, தலைப்பாகையோடும் கொடுவாள் மீசையோடும் நின்றிருந்த குலசேகரனைச் சுட்டிக் காட்டினாள்.

''அப்படியா, தம்பி! பொன்னையாவின் நண்பனா நீ?''

''ஆமாம், அடிகளே!'' என்று குலசேகரன் கூறிவிட்டு, நழுவப் பார்த்த போர்வையைச் சரியாக இழுத்துப்போட்டான்.

''பொன்னையாவின் நண்பனா— அதுதான் கேட்டேன்! இல்லாவிட்டால், புத்த விகாரத்தில் கொலையைப் பற்றி அவ்வளவு ஆர்வத்தோடு நீ பேசியிருக்கமாட்டாயே!...உன் பெயர்......' என்று மறந்துவிட்டதை நினைவிற்குக் கொண்டுவரச் சிரமப்படுபவரைப் போல, நெற்றியைத் தடவினார்.

'என் பெயர் பூஞ்சோலை!'

'பூஞ்சோலை!' என்று முணுமுணுத்தபடி, அங்கே இருந்த பாறையின்மீது அவர் உட்கார்ந்தார்.

''உட்காருங்கள்!''

குலசேகரனும் அஞ்சலையும் கீழே புற்றரையில் உட்கார்ந்தனர்.

''பூஞ்சோலை! உன்னைப்போலவே பொன்னையாவும் ஒரே துடிதுடிப்பாக இருந்தான். இரத்தம் சிந்தாமல் எந்த வெற்றியும் பெற முடியாது என்ற தவறான எண்ணத்தில் நன்றாக ஊறிவிட்டிருந்தான்! அவன் முடிவு என்னவாயிற்று பரிதாபம்!''

அறிவொளி அடிகள் இவ்வாறு சொன்னதைக் கேட்டதும், அஞ்சலையின் கண்கள் கலங்கின.

''என் அண்ணா யாரைக் கொல்ல நினைத்தாரோ—அவர் இதோ என் பக்கத்தில் இருக்கிறார்! என் அண்ணாவிற்குத் தூக்குத் தண்டனை தந்தவர் எவரோ, கல்லறைப் பிணமாக்கியவர் எவரோ—அவர் இதோ என் தயவில் இந்த சேரநாட்டு மண்ணில் உயிரோடு உட்கார்ந்திருக்க முடிகிறது!'' என்று பெருமூச்சு விட்டபடிப் புருவங்களை உயர்த்திக் குலசேகரனைப் பார்த்தாள்.

''அடிகளே! ஆருயிர் நண்பன் பொன்னையாவின் முடிவு இருக்கிறதே—அதுதான் என்னை இப்படி தீவிரவாதியாக மாற்றிவிட்டிருக்கிறது! சிறு எறும்பிற்கும் தீமை செய்யக்கூடாது என்ற எண்ணங் கொண்டவன்தான் நான்! ஆனால் அந்த குலசேகரனை நினைக்கும் போது, பொன்னையாவின் பிணம் என் கண்முன் தோன்றி, 'பழிக்குப் பழி வாங்காமல் அவனை விடாதே!' என்று கட்டளையிடுகிறது!' என்று கணீர் என்ற குரலில் குலசேகரன் சொன்னதைக் கேட்டதும் அறிவொளி அடிகள் கலகலவென்று சிரித்துவிட்டார்.

''கோபத்தை நயத்தால் வெல்ல வேண்டும்; தீமையை நன்மையால் வெல்ல வேண்டும்; கருமையை ஈகையால் வெல்லவேண்டும்; பொய்யை மெய்யால் வெல்லவேண்டும்— என்பது புத்தபிரானின் மணிமொழி! அந்த அமுத வாக்கை உன்னைப் போன்றவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டாம்! பொன்னையா

(15-ம் பக்கம் பார்க்க)

# தம்பி

## வந்திடு! ஒளிதந்திடு!!

"விருந்தா! அங்கேயா? கர்மம்! கர்மம்! வேளா வேளைக்கு வெந்ததோ நொந்ததோ ஏதோ ஒருவகையானது கிடைத்தால்போதாதா? விருந்து போட்டிட்டான், விலாப் புடைக்கத் தின்றுக்கிடந்தேன் என்று எண்ணிக்கொண்டுள்ளீர், வேதனை! வேதனை!"

"சுவைமிக உண்டு! உண்போர் மறவார்! ஊரோரே! வாரீர்! என்றெல்லாம் முன்பு பேசிடுவீரே; கேட்டிருக்கிறேனே, அதனுல்தான், அங்கு விருந்துச் சுவை உண்டுபோலும் என்று எண்ணிக்கொண்டேன்."

"அங்கு இருந்தபோது நான் பேசியதையா நம்பிவிட்டீர்கள்! ஐயோ! ஐயோ! அவன் கையைக் காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சுவது என்னை அவ்விதமெல்லாம் பேச வைத்தது."

"அப்படியானுல் அங்கு ஒரு நலனும் இல்லை, பெற்றிடவில்லை என்று சொல்லுங்கள்."

"அதற்கு என்ன ஐயம்! ஒரே வறட்சி! ஓயாத தொல்லை. சிற்சில வேளைகளிலே சீர் தலைகாட்டும்; அஃது நான் அளித்தது; அவனிடமிருந்து பெற்றது அல்ல."

"போதுமான அளவு பண்டங்களே கிடையாதோ, அங்கு."

"அங்கு என்ன உண்டு! பண்டம் பலவற்றைப் பாடுபட்டு நான் தேடிக்கொண்டு போய்த் தருவேன்; பாவிப்பயல் அருமை தெரியாமல் அத்தனையும் பாழடிப்பான்! பண்டம் இருந்தால் மட்டும் போதுமோ பாங்காகச் சமைத்திட திறம் இருக்க வேண்டாமோ? ஏது திறம்? எல்லாப் பண்டந்தனையும் கூட்டிக் குழப்பிக் கொதிக்க வைத்துத் தந்திடுவான்! என் செய்வேன் நான். இடமறியாது இங்கு வந்து சிக்கினேனே, விடுதலை நாள் என்றோ என்றெண்ணி ஏங்கிக்கிடந்திடுவேன். . வேறுவழி."

"கூட்டுடன் குழம்புண்டு, வறுவல் பொறியலுடன் வகையான சுவையான பல உண்டு என்றெல்லாம் கூறுவரே."

"கூறினேன் நான்; கூசாமல்; கூறுதே இங்குள்ள குறையையெல்லாம் என்று கூப்பிடுவான் கரந்தன்னை, என் செய்வேன்! கொதிப்பை அடக்கிக்கொண்டு, குளிர்ச் சோலை! மணமாலை! தேன் அருவி! கனிச்சாறு! என்றெல்லாம் கூறிவந்தேன், அன்று."

"இன்று இங்கு கண்டிடும் நிலை உமக்கு மனநிறைவு தருகிறதோ?"

"மனநிறைவா! நன்று! நன்று! இன்றே காண்கிறேன் இனிமை எல்லாம்! என்னென்று இயம்பிடுவேன் என் மகிழ்வை! மல்லிகைப் பூவின் நிறம், மணம்! மாதுளையின் சுவை! மாத்தமிழ்போல் இனித்திடுது இவ்வுணவு! செம்பொன்னை உருக்கியோ வைத்துள்ளார் என்றன்றோ எண்ணிக்கொண்டேன், குழம்புதனைக் கண்டபோது! ஒவ்வொன்றும் இனிக்கிறது! ஒவ்வொன்றும் என்னை இவ்விடத்துடன் பிணைக்கிறது. இஃதன்றோ விருந்து! இதுவன்றோ இல்லம்! இங்கன்றோ நான், நானாக இருக்கின்றேன்."



"தலைவாழை இலை இல்லை என்று குறைகாண்பீரோ! தயிரன்னந்தன்னில் நீரதிகம், வெண்ணெய்ப் பசை குறைவு என்றெண்ணிக் கவலைப்படுவீரோ என்றெல்லாம் எண்ணிக்கொண்டேன்."

"தவறு! பெருந்தவறு! தரணியெங்கும் எடுத்துரைப்பேன் இங்குள்ள மாண்பதனை; தங்க நிகர் குணம் உமக்கு! அங்குள்ளோன், வெறும் ஈயம்! பலாச்சுளைப் பேச்சு இங்கு; அங்கோ பழய சோறு!! உப்புண்டா அளவோடு அங்கு? இங்கு, தாங்கள் தொட்டாலேபோதும், தித்திப்பு ததும்பிடுதே! என்னென்பேன் தங்கள் இன்முகத்தின் காட்சிதனை! எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகம் அங்கு! எழுதிடுவேன் ஓவியம் நான் என்றெண்ணுவோன் இஃதன்றோ இனியமுகம் என்றன்றோ கூறிடுவான், இத்திருமுகத்தைக் கண்டக்கால். நல்ல இடம்! நல்லோர் உள்ள இடம்! நான் நாள் பலவாய் அலைந்தலைந்து கண்டறிந்தேன் இத்திரு இடத்தை! இனி இவ்விடத்துப் பெருமைதனைப் பாரறியச் செய்திடுவேன்! பாவிமகன் இருக்கின்றானே அப்பாழிடம், அதன் கொடுமை அவனி அறிந்திடவைப்பேன்! அஃதே இனி என்பணி! ஆம்!"

❀

விருந்து கிடைத்திடும் இடம் எதுவோ அது நல்இடம், நம் இடம். என்று கூறிடும் இயல்பினன், ஓரிடத்தில் இருந்துவிட்டுப்பிறிதோரிடம் வந்தடைந்தால் முன்னைய இடத்தைப்பற்றிப் பல பழியும்பேசி, புதிய இடத்தார்க்குப் பூரிப்புத் தந்திடவே முனைவான்.

## நில், கவனி.......

**ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி—ஊதாரித்தனத்தின் விளைவு; அகலக் கால் வைத்ததன் பயன்; சர்க்கார் பொருளாதாரக் கொள்கையின் தோல்வி!**

**நீண்டகால நிர்வாகச் சீர்கேட்டின் விளைவு! வேதனையை அனுபவித்துத்தான் தீரவேண்டும்!**

—இராசாசி.

**விவேகமற்ற முடிவு! பிரதிகூலம் அதிகம்!**

—காங்கிரசு அமைச்சர் வெங்கட்ராமன்.

**விலைவாசிகள் உயரும்! உள்நாட்டுப் பொருள்களை வெளிநாடுகளிடம் குறைந்த விலைக்கு விற்க வேண்டி வரும்.**

—முன்னாள் வர்த்தகசபைத் தலைவர்.

**சர்க்கார் இழைத்த தவறு இது! பணவீக்கம் மேலும் அதிகமாகும்!**

—சுதந்திரக் கட்சித் தலைவர் வாடிலால்.

**எதிர்க் கட்சியினரை இனி எதற்குச் சந்திக்க வேண்டும்? முடிவுதான் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டுவிட்டதே!** —பி. சோ. தலைவர் துவிவேதி.

**அந்நிய நிர்ப்பந்தத்துக்கு அரசு பணிந்து விட்டது!** —காங்கிரஸ் எம். பி.க்கள்.

**நாட்டின் நலனுக்கு ஆட்சினர் செய்துள்ள துரோகம்!** —வலதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சி.

**வைத்தியம், வியாதியைவிட மோசமாக இருக்கிறது!**
—பாராளுமன்ற சுயேச்சை உறுப்பினர் ஒருவர்.

**இந்தியப் பொருளாதாரத்துக்கு நேர்ந்துவிட்ட பேரிடி! காங்கிரசிடம் ஆட்சியைக் கொடுத்ததற்குத் தக்க தண்டனை!** —பிரோஸ் ஜெ ஷராப்.

அவன் பேச்சைக் கேட்டிடும் புது இடத்தார், புத்தி கெடாதநிலையில் இருப்பாரேல், "ஏதேது இவன் காலின் கீழ்போட்டு மிதிக்கின்றான், முன்பு கண்ணில் ஒத்திக்கொண்டதனை! ஏத்தி ஏத்தித் தொழுததனை இன்று பிய்த்துப்போடுகிறான்! இவன் இயல்பு, ஆபத்தைத் தருவதன்றோ! அந்த இடம்பற்றி இந்த இடம் வந்த உடன் இத்தனைக் கூறுபவன், இந்த இடம்விட்டு ஏகிடும் நிலை பிறந்திடின், எங்கெந்த இடம் சென்று ஏதேது கூறுவனோ! துணிந்த பேர்வழி இவன் போன்றார் தம்மைச் சற்றுத் தொலைவினிலே நிறுத்திவைத்திடவேண்டும். அருகே வந்திவனும் அணைப்பைப் பெற்றிடின், நானறிவேன் எல்லாம்; நவில்வேன் கேளீர் என்றே நாலுபேரிடம் சென்று நம்மைப்பற்றி நாராசம் பேசிடுவான்; நல்லது தாராது இவன் நட்பு! என்றறிந்து அதற்கேற்றபடி நிலையை அமைத்துக்கொள்வார்!

அஃதன்றி, பழி பேசக்கேட்பதிலே பாகுசுவை கண்டு மகிழ்ந்திடும் குறைமதியாளனெனின், குறை கூறுவோனைக் கூடத்திலே அமர்த்தி, குதூகலமும் தான் ஊட்டி, கூறு! கூறப்பா! குறைகளை எலாம் கூறு! எனக் கேட்டு மகிழ்ந்திருப்பார். இன்று ஒருவருக்கு! நாளை, நமக்கே இவன் பகைவனாகிவிடின், இஃதே போல இழித்தும் பழித்துமன்றோ பேசிடுவான் நம்மைப்பற்றி என்பதனை அறிந்திடாமல்.

❀

முடியுடை மூவேந்தராட்சி மறைந்து நாடெங்கும் சிற்றரசரும், பாளையக் காவலர்களும் ஆங்காங்கு கொலுவிருந்த நாட்களில், ஒரு சிற்றரசனிடம் கைகட்டி நின்றும், களிப்பூட்டி வந்தும், காலந்தள்ளிடும் பேர்வழிகள், அங்கு பசை குறைவு, வேறுபசை தேடிடுவோம் என்று எண்ணிப் புதிய இடம் போய்ச் சேருவதும், அங்கு, முன்பு இருந்த இடந்தன்னைப் பற்றித் தூற்றிக்கிடப்பதும் வாடிக்கையாகிவிட்டிருந்தது. அந்த நிலையினை விளக்குவதே, மேலே காட்டியுள்ள உரையாடல்.

❀

இன்று, கட்சியைவிட்டுக் கட்சி தாவிடும் கண்ணியவான்கள், இந்த 'மரபு' கெடாமல் காப்பாற்றிக் கொண்டு வருகின்றனர்! காண்கின்றாயே, தம்பி! இங்கு இருந்தபோது அவர்களுக்கு எல்லாம் இனித்தது, சுவைத்தனர்; இந்த இடம்விட்டுச் சென்றதும், புதிய இடத்துள்ளார் முன், புகழ்பாடிக் கிடப்பதுடன் இருந்துவிட்டு வந்த இடம்பற்றி இழித்துரைத்திடுவதனைக் கலையாக்கி, நல்ல விலைக்கும் விற்கின்றார்! நா வாணிபம், நல்லபடி நடக்கிறது. அவர் பேச்சு பற்றிச் சிற்சிலர் என்னிடம் கூறிடக் கேட்கின்றேன். சூழ்நிலை இன்றுபோலன்றி சிறிதளவு நல்லதாக இருந்தகாலந்தன்னிலேயே, விருந்தளித்தஇடம்பற்றிப் புதிய விருந்தளிப்பான் மாளிகையில், பழிபேசிப் பிழைத்து வந்த பலர்பற்றி நினைக்கின்றேன்; சிரிக்கின்றேன்; வாழ்வுபெற, செச்சே! அஃதும்அல்ல; வாழ்வை நடத்திச்செல்ல, என்னென்ன செய்கிறார் என்றெண்ணி — அவர்க்காக இரங்குகின்றேன்! ஏதோ பாவம், இஃது செய்தேனும் இருக்க நினைக்கின்றாரே, அஃதேனும் அவர் விருப்பத்தின் அளவுக்கு நடைபெறட்டும்; இங்கு இருந்துவிட்டுச் சென்றவர் அல்லவோ அவர்! எப்படியோ சுவை பெறட்டும், சுகப்படட்டும்!! என்றும்கூட எண்ணிக்கொள்கின்றேன். **ஆனால் தம்பி! ஒன்றுமட்டும் புரிவதில்லை எனக்கு;**

# குயிலின் குரலை ரசிக்கிறாயாவென ஆந்தை கேட்டதாம் கோட்டானை!!

ஆகவே கவலைகொள்கின்றேன். என்னவெனில், எது உண்மை, எது நடிப்பு: இங்கு இருந்தபோது அவர் குலவியது உண்மையா, அன்றி அங்கு சென்று தட வித்தருகின்றனரே, அஃது உண்மையா, எதுஉண்மை, எது போலி! என்பதுதான் புரியவில்லை. ஏனெனில், இங்கு அவர் இருந்த காலை சொரிந்த அன்புரையும் வரைந்த வாழ்த்துரையும், கொஞ்சமல்ல! அவை அவ் வளவும் அவர் உள்ளத்தில் ஊறிவந்தனவா, வெறும் உதட்டசைவா? உதட்டசைவே என்று கொண்டிடின், இன்று அவர் அங்கு சென்று உரைத்திடுபவை? உள் ளத்தில் ஊற்றுப் பெருக்கெடுத்தோடி வருபவை என் கின்றார். ஆயின் இங்கு இருந்தபோது அஃதே சொன் னார்! எனின் இன்று அங்கு உள்ளம் உரைப்பது என்றுரைப்பவை தம்மை நாளை உதட்டசைவே! என்று கூறிடமாட்டார்கள் என்பதற்கு ஏது உறுதி!!

உண்மை எது, போலி எது என்று எண்ணிடும் போதன்றி, பிறிதோர் நேரம், அவர் கூற்று பலபற்றி நான் பொருட்படுத்திக்கொண்டில்லை. உலகம் என் றால், பல இருக்கத்தான் செய்யும் என்றெண்ணி இருந்து வருகின்றேன். அஃதேபோல, இவர்போன்றார் நிலைகண்டு, உலகின் போக்கை உணர்ந்துகொள் தம்பி! என்றுனக்கும் கூறுகின்றேன். அவர் பேச்சு, அவர் நிலையின் விளைவு என்பதனை அறிந்துகொள்ளின், அப் பேச்சுதனைக் குறித்து கவலைகொளல் வீண் என்ற உணர்வு பெற்றிடலாம்.

என்னென்ன விந்தையான மாறுதல்களைக் காண் கின்றோம் என்பதனை எண்ணிடும்போது, நகைத்திடக் கூடத்தோன்றும். அந்த வகையில் அவர்கள் நம்மிடம் இல்லாமலேயே, நமக்குப் பொழுதுபோக்கு தந்திடும் வேலையையும் செய்து வருகின்றனர் என்றும்கொள்ள லாம். நான் அவ்விதமாகத்தான் எண்ணிக்கொள் கின்றேன்.

தேர்தல் நெருங்க நெருங்க, தம்பி! இவர்போன் றாரின் வேலை சுறுசுறுப்படையும். ‘அங்கு இருந்த பேர் வழி’ என்பதனையே ஓர் ‘தகுதி’யாக்கிக்கொண்டு, தூற்றிடுவர்; அதற்காகத்தானே இவர்களை இங்கு அமர்த்தி இருக்கிறோம் என்ற எண்ணத்தில் புதிய இடத்துத் தலைவர்களும் தட்டிக்கொடுத்து வேலைவாங் குவர். இந்த நிலைமையினை நன்கு உணர்ந்துகொண் டால், இருந்துவிட்டுப் போனவர்களின் தூற்றல் பற்றிக் கவலைப்படக்கூடாது என்ற தெளிவு பிறந் திடும். அதற்கே இதனை விளக்கினேன்.

தம்பி! கோட்டான்கள் அனைத்தையும்தொலைத்தா லொழிய நமது இசையின் இனிமையையும் அருமை யையும் எங்கனம் மாந்தர் உணர்ந்திடமுடியும் என்று குயில் எண்ணுகிறதோ! இல்லையே! எத்தனை எத்த னையோ கத்தல் கதறல், உறுமல் குமுறல், இருந்திடி னும் நமது குரலினிமையை நுகர்வோர் நுகர்வர் என் றன்றோ மாங்குயில் பூஞ்சோலையில், கூவி இன்பத்தை வழங்குகிறது.

கோட்டான்பற்றிய குறிப்பினைத் தந்ததும், நான் படித்த ஒரு கட்டுரை நினைவிற்கு வருகிறது; தரு கிறேன்,

முகிலன் என்பார், ‘தமிழ் மலர்’ எனும் சிங்கப்பூர் நாளிதழில் தந்ததிது.

அந்தக் காடு, மனிதர்களின் நடமாட்டமின்றி அமைதிபெற்றிருந்தது.

பல்வகையான பறவை இனங்கள் அங்குமிங்கும் பறந்துகொண்டும், அது அதற்குரிய ஓசைகளை எழுப் பிக்கொண்டும் இருந்தன.

காட்டின் ஒரு மூலையில் அமர்ந்திருந்த கோட் டான், எதையோ நினைத்து வேகமாகக் குரல் எழுப் பிக்கொண்டிருந்தது!

அப்பக்கமாகப் பறந்துவந்த ஆந்தை, இந்தக் கோட்டானின் குரலைக்கேட்டு அதற்கெதிரே வந்த மர்ந்து அதையே பார்த்துக்கொண்டிருந்தது.

‘நம் குரலின் இனிமையைக் கேட்டுத்தான் இந்த ஆந்தை இங்கு ஓடி வந்திருக்கிறது’ என்று நினைத்த கோட்டான், மேலும் மேலும் வேகமாகக் கத்த ஆரம் பித்தது!

இந்த அலறலைக் கேட்ட ஆந்தை, ‘இது என்ன வெறும் அலறல்?’ என்று கேட்டது.

‘என்ன அலறலா? என் குரல் உனக்கு அப்படியா தோன்றுகிறது?’ என்று கேட்டுவிட்டு ஆந்தையை வெறுப்புடன் பார்த்தது!

## மேலே...மேலே....இன்னும் மேலே!

திட்டங்களுக்கான இறக்குமதி மதிப்பு, நாணயக் குறைப்பினால், ரூ: 2,480 கோடியி லிருந்து ரூ. 3,893 கோடியாக உயரும்!

ரூ. 5,370 கோடி அளவில் நிர்ணயிக்கப்பட் டிருந்த மற்றைய இறக்குமதியின் மதிப்பு இப் போது ரூ, 8,430 கோடியாக உயர்ந்துள்ளது!

தங்கம், வெள்ளி ஆகியவற்றின் மறைமுக —வெளிப்படை விலைகள் ஏறியதுபோலவே, கடலை எண்ணெய் விலை, முன்னைவிட குவிண்டா லுக்கு ரூ. 10-ம், தேங்காய் எண்ணெயின் விலை குவிண்டாலுக்கு ரூ. 5-ம் உயர்ந்தன!

கல்கத்தா கடைகளில் பெரும்பாலான வியாபாரிகள் பொருட்களைப் பதுக்க ஆரம்பித் திருக்கிறார்கள்! பாலுணவு போன்ற பண்டங் கள் இப்போதே 40 சத விகித விலை உயர்வை எட்டிவிட்டன!

எல்லா நகரங்களிலுமே மோட்டார், எஞ் சின் உதிரி உறுப்புக்களின் விற்பனையாளர்கள், வியாபாரத்தை அறவே மூடிவிட்டார்கள்!

மிளகு, கிராம்பு போன்ற வாசனைப் பொருட்களின் விலைகள் உடனடியாக நாற்பது முதல் ஐம்பது சதவீதம் வரையில் உயர்ந்தது!

'அலறல் என்பது எனக்குத்தான் உரியதென்று இருந்தேன்! ஆனால், இப்போது நீயும் அலற ஆரம்பித்துவிட்டதால், அதை நான் வேறுவிதமாகச் சொல்ல முடியவில்லை' என்று ஆந்தை பதிலளித்தது.

நான் உன்குரலுக்கு முயற்சிக்கவில்லை! என்குரலிலேயே ஏற்றமுறத்தான் பயிற்சிசெய்கிறேன். அந்த முயற்சியை நீபாராட்டாவிட்டால், உனக்கு 'ரசனையே தெரியாது' என்றுதான் சொல்லவேண்டும்!'கோட்டான் இப்படிக் கூறிவிட்டு மேலும் அதை ஆணவமாகப் பார்த்தது!

'ஆமாம் ஆமாம்எனக்கு 'ரசனை' தெரியாதுதான். ரசனை தெரிந்த நீ, என்குரலைப் பற்றி என்ன நினைக்கிறாய்?' என்று ஆந்தை கூறிவிட்டு அலற ஆரம்பித்தது!

ஆந்தையின் அலறலைக் கேட்ட கோட்டான், 'பரவாயில்லையே! இந்த அளவுக்கு உன் தகுதி உயர்ந்திருக்குமென்று நான் நினைக்கவேயில்லை!' என்று பாராட்டுக் குரல் எழுப்பியது.

கோட்டானின் பாராட்டைக் கேட்டதும் ஆந்தைக்கு மகிழ்ச்சி பொறுக்கமுடியவில்லை! 'நண்பா, இன்று முதல் உனக்கு நானாகவும் எனக்கு நீயாகவும் பாராட்டிக்கொண்டு வாழ்வதுடன், இந்தக் காட்டிலேயே—ஏன் வேறு எந்தக் காட்டிலும் நம் புகழை நிலைநாட்ட நாம் பாடுபடுவோம்!' என்று கூறியது.

கோட்டானுக்கு ஆந்தையின் நட்பு கிடைத்ததும் அதற்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.


# சேகர் டுடோரியல் காலேஜ்

## 19, சத்திரம் தெரு, திண்டுக்கல்.

**P. U. C.** *(all Parts & all Subjects)*

**S. S. L. C., B. A., B. Sc., Part I வகுப்புகள் ஆரம்பித்துவிட்டன. பெண்களுக்குத் தனி கட்டிடத்தில் தனி வகுப்பு. ஹாஸ்டல் உள்ளது. வெற்றி உறுதி, உடனே சேர்க.**

**S. S. L. C. (Oct.) 97 percent**

**P. U. C. (April 66) 100 percent**

**திண்டுக்கல்லிலேயே முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டதும் அதிக மாணவர்கள் தேறுவதும் இதுதான்.**

**கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எங்கள் கல்லூரியின் வெற்றியின் குறிக்கோள்.**


அந்தச் சமயம் அங்கு வந்த குயில், பக்கத்திலிருந்த மரத்திலமர்ந்துகொண்டு, தன் குரலின் இனிமையை அடக்கமாகப் புலப்படுத்திக் கொண்டிருந்தது.

அக்கம்பக்கத்திலிருந்த மற்ற குருவிகள், அந்தக் குரலைக் கேட்டுப் பலவகையான பாராட்டுக்களை எழுப்பிக் கொண்டிருந்தன.

இந்தக் காட்சியைக் கண்ட ஆந்தையும் கோட்டானும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டிருந்தன.

'என்ன நண்பா, இந்தக் குயிலின் குரலை உன்னால் ரசிக்க முடிகிறதா?'—ஆந்தை கோட்டானைப் பார்த்து இப்படிக் கேட்டது!

நம் குரலையே நாம் ரசிக்க நேரமில்லாதிருக்கும்போது, இவற்றுக்கெல்லாம் நமக்கேது நேரம்? அந்தக் குயிலைச் சுற்றிக்கொண்டிருக்கும் மற்றவற்றுக்கு 'ரசனை' என்றால் ஏதாவது தெரியுமா? தெரிந்திருந்தால் இப்படிக் காட்டுக் கூச்சலைக் கேட்க ஓடுமா? என்று கோட்டான் ஆரம்பித்தது!

'நமக்கு மற்றவற்றைப்பற்றி அக்கறையில்லை! அதுகள் ஒரு வழி என்றால் நாமும் அவ்வழியில்தான் செல்லவேண்டுமா? நமக்கென ஒரு வழி இருக்கும்போது நாம் ஏன் அவ்வழியை நாடவேண்டும்?'—ஆந்தையின் இந்தப் பதில் கோட்டானுக்கு குதூகலத்தையளித்தது.

'ஆம் நண்பா, நம் திறமையை நாம் புரிந்திருக்கும்போது, பிறர் புரிந்தாலென்ன புரியாவிட்டால் என்ன நீ உன் குரலை எழுப்பு, நான் ரசிக்கிறேன். நான் என் குரலை எழுப்புகிறேன் நீ ரசி!' என்று கோட்டான் கூறியதும் இரண்டும் சேர்ந்து ஏக காலத்தில் அந்தக் காட்டில் குரலெழுப்ப ஆரம்பித்தன.

காலம் ஓடிக்கொண்டிருந்தது.

குயிலின் புகழுக்கு இணையாக வரவேண்டுமென்று நினைத்த ஆந்தையும் கோட்டானும், எங்கெங்கு பறந்துசென்று கத்தமுடியுமோ அங்கெல்லாம் சென்று கத்திப்பார்த்தன! அலறிப்பார்த்தன!

அலறலையும் ஆரவாரத்தையும் கண்ட மற்ற புள்ளினங்கள் எங்கு செல்லவேண்டுமோ அங்கு சென்றுகொண்டிருந்தன. எதைக்கேட்க வேண்டுமோ அதைக் கேட்டுக்கொண்டிருந்தன!

❃

மற்றோர் வகையினரும் உண்டு; இவர்கட்கும் தேர்தல் நேரம், சுறுசுறுப்பு மிக்க நேரம். இவர்களின் வேலை, வதந்திகளைக் கட்டிவிடுவது.

தெரியுமா, தெரியுமா? என்று துவங்கி சிப்பிக்குள் முத்து இல்லை, செந்தேள் குட்டி உளது; கண்ணுக்குள் கருமணி இல்லை, கண்ணாடித் துண்டு உளது, என்று எதையாவது மூட்டிவைப்பர்.

தாம் கூறுவதை, மற்றவர் நம்பிடவேண்டும் என்பதற்காகக்கூட அல்ல, நம்புவார்கள் என்ற எண்ணம் கொண்டுகூட அல்ல, சில நேரமாகிலும் வதந்தி வெளியட்டும், பலர் காணட்டும், அதுபற்றிப் பேசட்டும், அந்தப் பேச்சிலிருந்து ஏதேனும் புகை கிளம்பட்டும், பகை மூளட்டும் என்ற கெடு நினைப்புடன்.

அவரும் அவரும் கூடிக்கூடிப் பேசுவது ஏன்?

இவருக்கு உள்ள திறமை அவருக்கு உண்டா என்பதுபற்றிப் பலமான விவாதம் நடக்கிறதாமே?

எவர்பற்றியும் எனக்குக் கவலை இல்லை என்று அவர் மிகக் கடுமையாகப் பேசினாராமே?

அவர் பக்கத்தில் நான் அமரமாட்டேன் என்று இவர் பிடிவாதம் செய்தாராமே?

இப்படிப்பட்ட பேச்சுகளை அவிழ்த்துவிடுவர், அமைதியுடன், துளியும் பரபரப்பு காட்டாமல், ஏது மறியாதார் போன்ற கோலம் புனைந்துகொண்டு.

அப்படியா? என்று சிலர் கேட்பார்கள்.

அண்டப்புளுகு என்று சிலர் கூறுவார்கள்.

இருக்கவே இருக்காது என்று சிலர் சொல்லுவார்கள்.

ஆதாரம் காட்டு என்று சிலர் அறைகூவல் விடுப்பார்கள்.

ஆகமொத்தம், அந்த வதந்தியை அவிழ்த்துவிடுவதன் மூலம், பலருடைய கவனத்தை ஈர்த்திட முடிகிறது, பலவிதமான எண்ணங்கள் எழச்செய்ய முடிகிறது அல்லவா; அதுவரையில் இலாபம் என்ற நினைப்புடன் பேசிடும் போக்கினர், தேர்தல் நெருங்க நெருங்க, வேகத்துடன் வேலை செய்வர்.

தம்பி! வெறும் வதந்தியைப் பரப்பியே, இங்கிலாந்து நாட்டைப் போரிலே இழுத்து விட்டுவிட்ட சம்பவம் ஒன்று உண்டு.

அந்தப் போருக்கே, **ஜென்கின்ஸ்** காது பற்றிய போர் என்று பெயர்.

**ஜென்கின்ஸ்** என்ற பிரிட்டிஷ் கடற்படைப் பிரிவினைச் சேர்ந்த ஒரு வீரனை, மடக்கிப் பிடித்து பிரான்சுக்காரர்கள், அவனுடைய காதை அறுத்துப் போட்டுவிட்டார்கள் என்று எவனோ ஒரு வதந்தியைக் கட்டிவிட்டான்.

அப்படி நடந்திருக்குமா? யார் கண்டார்கள்? ஜென்கின்சு என்ன சொல்கிறான் என்றெல்லாம் யோசிக்கக்கூட இல்லை. வதந்தி வேகமாகப் பரவப் பரவ, சிந்தனை பாழ்பட்டது, சீற்றம் மிகுந்தது, காது அறுத்த கயவர்களை விடக்கூடாது! பழிக்குப் பழி! இரத்தத்துக்கு இரத்தம்! காதுக்குக் காது! என்ற காட்டுக் கூச்சல் கிளம்பிற்று. போரே மூண்டது. போர் முடிவுற்ற பிறகுதான், **ஜென்கின்ஸ்** என்ற பெயருடையான் எவனும் பிரிட்டிஷ் கடற்படையில் இல்லை; எவனுடைய காதையும் பகைவர் துண்டித்துப் போடவில்லை; அது வெறும் கட்டுக்கதை என்பது தெரிந்தது. ஆனால் அதற்குள் ஒரு போரே நடந்தேறி விட்டது.

இது போன்ற வதந்திகளைத் தமது தனிச் சரக்கு ஆக்கிக்கொண்டுள்ள விபரீத வியாபாரிகள் தேர்தல் சமயத்தில் தமது கடையினை விரிப்பர்; பரபரப்பு தன்னாலே மூண்டுவிடும் நேரம் இது என்பதாலே.

எவரெவர் நமது கழகத்தின் பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளனரோ, அவர்கள் நமக்குத் தெரிவிக்க வேண்டியவைகளை, தெரிவிக்கவேண்டிய நேரத்தில், தெரிவிக்கவேண்டிய முறையில், தெரிவிப்பார்கள் நமது கழகப் பொறுப்பிலே ஈடுபாடு கொள்ளாதவர்கள் எதை எம்முறையில் கூறிடினும், நாம் அது குறித்துக் கவலை கொள்ளக் கூடாது என்ற திடமனம் கொண்டிடவேண்டும். நமது தோழர்கள் அத்தகைய திடமனம் கொண்டோராக இருந்திடுவதாலேயே, பல ஆண்டுகளாக, தனித்திறமை காட்டிக் கட்டிவிடப்பட்ட வதந்திகள், மூட்டிவிடப்பட்ட கோள்கள், நமது கழகத்தை ஏதும் செய்திட இயலாது, வீழ்ந்து பொடிப் பொடியாகிவிட்டன.

> ## ஒரு முகம் -- இரு கண்கள்!
>
> நாட்டின் இன்றைய நிலைமையையும், பிரச்சினைகளையும் பிரத்யட்சமாக ஆராய்ந்து, பிரத்யட்ச உணர்வுடன் மத்திய அரசாங்கம், ரூபாய் நாணயத்தின் மதிப்பைக் குறைத்திருக்கிறது.
>
> **—பக்தவத்சலம்.**
>
> ரூபாய் நாணயத்தின் மதிப்பைக் குறைப்பதால் ஏற்படப் போகும் சாதக நிலைமையைவிட, பாதக நிலைமை அதிகமாயிருக்கும். இந்த பாதக நிலைமையின் எதிரொலி விபரீதமானதாயிருக்கும்.
>
> **—ஆர். வெங்கட்ராமன்.**

இந்தியாவுக்குக் கிடைத்திடும் 'சுயராஜ்யம்' துக்க ராஜ்யம் என்று பெரியார் கருதி, ஆகஸ்ட்டு பதினைந்தாம் நாளைத் துக்கநாள் என்று நடாத்திட அறிக்கை விடுத்ததை நான் மறுத்ததனை அறிந்திருப்பாய்.

தம்பி! அப்போது என்னைப்பற்றிக் கட்டிவிடப்பட்ட வதந்திகள் கணக்கில் அடங்கா!

இப்போது எண்ணிக் கொண்டாலும் எனக்குச் சிரிப்பு வருகிறது.

ஒரு வெடிச் சிரிப்பு கிளப்பிவிட்டுக் கேட்பார் ஒருவர்

என்ன விலை கெஜம்! நேர்த்தியாக இருக்கிறதே சட்டைத் துணி? கதர்தானே!

கதர் அல்ல ஐயா! வழக்கமாக நான் போடும் கைத்தறித் துணிதான்.

கதர் என்று பார்த்தேன். கைத்தறித் துணியா!

தம்பி! கேலி புரிகிறதல்லவா? ஆகஸ்ட்டு பதினைந்து துக்கநாள் அல்ல என்று நான் எழுதியதால், நான் காங்கிரசாகிவிட்டேன் என்று பொருள் கொண்டு, பலப்பல வதந்திகளைக் கிளப்பினர்.

நான் மட்டும் வதந்திகளின் தன்மையையும், அவற்றினைக் கிளப்பிவிடுவோரின் போக்கினையும் ஓரளவு தெளிவாகத் தெரிந்துகொண்ட நிலையினனாக இல்லாதிருந்திருப்பின், என்னென்ன நேரிட்டிருக்கக்

## வதந்திகளைப் பரப்பி, வால் நீட்டிப் பார்ப்பார் தம்பி!

கூடும் என்பதை எண்ணும்போது நடுக்கமே எடுக்கிறது.

வதந்திகளைக் கிளப்புகின்றவர்கள், பொறுப்பான பதவியினராக இருந்திடினுவது, அவர்களைக் கேட்கலாம், இது சரியா, முறையா என்று.

தவறானவைகளைக் கூறிடினும், பழிசுமத்திடினும், குற்றம் சாட்டிடினும், வழக்கேகூடத் தொடுக்கலாம்.

அவ்விதமான பேச்சுகளை, பொறுப்பில் உள்ளவர்கள் பேசுவதில்லை. பேசிடுவோரோ எதுபற்றியும் கவலையற்ற நிலையினர். அவர்களிடம் வாதாடுவதோ, மறுப்பு உரைப்பதோ, விளக்கம் கேட்பதோ வீண் வேலை.

மேடைமீது ஏறி, அத்தகைய ஒருவர்

> உங்கள் அண்ணாதுரைக்கு வலது கண் கெட்டுவிட்டது; பெயர்த்து எடுத்துவிட்டார்கள்; இப்போது உள்ளது கண்ணாடியால் செய்யப்பட்டது

என்று பேசுகிறார் என்று வைத்துக்கொள். உடனே நான் பதறிப்போய், ஊரூருக்கும் ஓடி, ஒவ்வொருவர் முன்னாலும் நின்று, ஐயா! என் கண்ணைப் பாருங்கள்! வலது கண்ணை! கண்ணாடி அல்லவே!-என்று கேட்டுக்கொண்டிருக்க முடியும்.

அப்படியே கேட்டிடின் என்ன எண்ணிக்கொள்வார்கள். கண் சரியாகத்தான் இருக்கிறது ஆனால், ஐயோபாவம், மூளைதான், என்னமோபோலாகிவிட்டது என்று கூறிப் பரிதாபப்படுவார்கள்.


# T. N. T. C.

## தமிழ்நாடு டுடோரியல் காலேஜ்

**தெப்பக்குளம் (வடகரை) திருச்சி-2**

**P. U. C. (Sept. 1966)**
**S. S. L. C. (Oct. 1966)**

ஆந்திரா மெட்ரிக்-தேர்வுகளுக்குத் திறமையான பயிற்சி

- சிறந்த சோதனைச்சாலை, வசதிமிக்க விடுதி
- அச்சடித்த பாடக் குறிப்புகள்
- அனுபவம் முதிர்ந்த ஆசிரியர்கள்.

*விரைவில் சேருங்கள்!*

கே. மகாலிங்கம் பிள்ளை, B A L T.,
PRINCIPAL.

வே. ஆனைமுத்து, CORRESPONDENT.


ஆகவே தம்பி! வதந்திகளுக்கு மதிப்பளிப்பது, நேரக்கேடு, அவைகளை மறுப்பது, அறிவுக்கேடு என்பதனை உணர்ந்திடின், அவைபற்றிய கவலையைக் கொள்ளாதிருக்கலாம்.

தம்பி! நமது கழகத் தோழர்களின் மனதைக் குழப்பிட, இதுவரையில் எண்ணற்ற வதந்திகள் கிளப்பிவிடப்பட்டன; எவற்றினையும் நமது தோழர்கள் பொருட்படுத்திடவில்லை, பொழுதைப் பாழாக்கிக் கொள்ளவில்லை என்று தெரிந்தும், பார்க்கலாம்! இந்த முறை பார்க்கலாம்! இந்த வதந்தியாவது பலிக்கிறதா பார்க்கலாம் என்ற ஆசைகொண்டு அலைவோர் நிரம்ப உள்ளனர். அவர்தம் வேகம் அதிகமாகும் காலம் இது. தேர்தல் காலம். ஏற்கனவே உன்னிடம் உள்ள தெளிவும் திடமனமும் மேலும் நேர்த்தியானதாகிட வேண்டும். அதற்கே இதனைக் கூறுகின்றேன்.

❁

பிறிதோர் வகையினரும் உளர். அவர்தம் தொழில் திறனையும் நான் காணுகின்றேன்.

> உங்களுடைய கல்யாணி, மிக அருமை! மிகமிக அருமை! தோடியில் ஒருகிருதி பாடினீர்களே அது முதல்தரமாக அமைந்திருந்தது. ஆனால், சற்று தாளத்தை மட்டும் கவனித்துக்கொள்ள வேண்டும்; அடிக்கடி தவறுகிறது! தாளஞானம், சங்கீதத்துக்கு அடிப்படை அல்லவா!!

இவ்விதம் ஒரு இசைவாணனிடம் பேசி, அவரைப் பாராட்டவும் செய்கிறேன், கண்டிக்கவும் செய்கிறேன்; நான் நடுநிலை நின்று 'குணதோஷம்' காண்பவன் என்று கூறிடுவோர் உண்டு!

ஒரே மொத்தமாகக் கண்டித்தால், இவருக்கு அவரைப் பிடிக்காது என்று ஒதுக்கிவிடுவார்கள், அந்த விமரிசனத்தைப் பொருட்படுத்தமாட்டார்கள் என்பதனால், புகழவும் செய்கிறேன், கண்டிக்கவும் செய்கிறேன் என்ற போலி போக்குக் காட்டி, தமது பேச்சுக்கு ஒரு இடம் தேடிப் பிடித்துக்கொள்பவர்கள் உண்டு; இசைத் துறையிலே மட்டுமல்ல; நமது துறையிலும்.

> அவர்கள், கழகத்தின் தொண்டர்கள் அருமையானவர்கள், அவர்கள் உழைப்பு தரமானது, இலட்சியப்பிடிப்பு நேர்த்தியானது, இதுபோன்ற தொண்டர்களை எங்கும் காண முடியாது. ஆனால்...ஆனால்...பாவம், அவர்களுக்கு விவரம்புரிவதில்லை, தெளிவு இருப்பதில்லை; எவனெவனையோ தலைவன் என்று தூக்கிவைத்துக்கொண்டு ஆடுகின்றனர்!

என்று குத்திவிடுவர்.

தொண்டர்கள் தரமானவர்கள், தலைவர்கள் படுமோசம்! என்று கூறி, தொண்டர்களுக்கும் தலைவர்களுக்கும் இடையே ஒரு 'பிளவை' உண்டாக்கிவைப்பதாக ஒரு மயக்க உணர்ச்சி அவர்களுக்கு.

இலட்சியப் பிடிப்பு. நேர்த்தியான உழைப்பு கொண்ட இயல்பினராகத் தொண்டர்கள் இருக்கும்போது, அவர்கள் தெளிவு அற்றவர்களாகவும், விவரம் புரியாதவர்களாகவுமா இருப்பார்கள், பொருந்தவில்லையல்லவா!

# ஆயிரம் யோசனை அளித்தாராம் அவர்!!

அதனால்தான் தம்பி! அவர்களின் அந்தப் பேச்சு பொருளற்றது என்பதனையும், பொச்சரிப்பைத் தனி முறையில் காட்டிக்கொள்ளும் பேச்சு அது என்பதனையும் நமது கழகத் தோழர்கள் உணர்ந்துகொண்டு விட்டுள்ளனர். அந்தவிதமான பேச்சு, பலன் தராது போயிற்று.

ஓரிரு திங்களுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது.

புதிதாகக் காங்கிரசில் சேர்ந்தார் ஒருவர்; கழகத்தவர்கூட அல்ல; கழகத்துடன் நேசத் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தவர்.

கழகத் தோழர் எவரும் அவரைக் கண்டு, கண்ணீர் மல்கிட நின்று எமை விட்டுப் பிரிந்தீரே ஐயா! என் செய்வோம் இனி நாங்கள் சொல்வீர்!—என்றெல்லாம் கேட்டிடவில்லை.

அவரே ஓர் நாள், முடி திருத்தகம் சென்றார்; சென்றவர் நான் யார் தெரியுமா என்றும் கேட்டார், முடிதிருத்தகத்திருந்த தோழரை.

அறிவேன் ஐயா! காங்கிரசில் புதிதாகத் தாங்கள் சேர்ந்த செய்தியையும் படித்துள்ளேன் ஐயா! என்று கூறினார். புகுந்தவருக்குக் கோபம்.

> ஆமாம்! காங்கிரசில் சேராமல் என்ன செய்வது. உங்கள் அண்ணாதுரைதான் கழகத்தைக் கெடுத்துவிட்டானே. நான் சொன்ன நல்ல யோசனைகளைக் கேட்க மறுத்துவிட்டானே, அதனால்தான் நான் காங்கிரசில் சேர்ந்தேன் என்றாராம்.

கடை உரிமையாளர், மெள்ளச் சிரித்தபடி,

> கழகத்தைப்பற்றிக் கழகத்தார் கவனித்துக் கொள்வார்கள். ஐயா! தாங்கள் காலமெல்லாம் நான் சுயேச்சையாகவே இருந்திடுவேன் என்று பேசி வருவீரே! இன்று காங்கிரசில் சேர்ந்தீரே! ஏனோ? என்று கேட்டுவிட்டு, கழகம் வளர நலல நல்ல யோசனைகளை எல்லாம் அண்ணாதுரையிடம் சொன்னதாகவும், அவர் கேட்க மறுத்ததாகவும் செப்பினீரே, கழகத்தில், யோசனைகள் கூறப்படும் இடத்திலே நான் தங்களைக் கண்டதே இல்லையே, ஒருநாளும். பொதுக் குழுவில் பேசுவர், யோசனைகள், திட்டங்கள் பற்றி. அங்கு நான் கண்டதில்லை தங்களை. எப்படி எனக்கது தெரியும் என்கின்றீரோ! நான் பொதுக்குழு உறுப்பினன்!! என்று கூறிடவே, புதுக் காங்கிரசாருக்குக் கோபம் கொப்பளித்து வந்ததாம். முடிதிருத்தகம் நடத்து, அரசியல் பேசாதே என்று கூவினாராம்! வாருமய்யா, திருத்துகின்றேன் முடிதன்னை என்று அத்தோழர் இருபொருள் கொண்ட பேச்சைத் தந்தாராம்.

கழகத் தோழர்களின் தெளிவினை விளக்கிடத் தக்க நிகழ்ச்சிகள் இதுபோலப் பல உண்டு.

என்றாலும், மூட்டிவிடுவோர் கடைசி மூச்சு உள்ளவரை முயற்சி செய்தபடியேதான் இருப்பர். அது அவர் வேலை! அல்ல! அல்ல! அருங்கலை!! ஆகவே தம்பி! அவர் போன்றார் உளர் என்ற உணர்வுடன், விழிப்புடன் இருந்திடல் நன்று,

❋

மற்றும் ஓர் வகையினர் உண்டு. அவர்கள் கழகத்தின் கொள்கை, வளர்ச்சி இவை பற்றிக் குறையேதும் கூறார்; மாறாக பாராட்டவும் செய்வர்; செய்துவிட்டு, 'ஆனால்' எனும் பதத்தை ஒட்டவைத்துச் செப்புவர்,

> இன்னும் கொஞ்சம்முறையாக, மேலும் சற்றுத் தரமாக, இன்னமும் சற்றுக் கண்டிப்புடன்

கழகத்தை நடத்திச் சென்றிடின் இன்றுள்ளதைக் காட்டிலும் பன்மடங்கு செல்வாக்கு வளரும் கழகத்துக்கு என்பர்.

இந்த அளவு கழகம் வளர்ந்ததற்கு, ஒப்பி உழைத்திடாதார்,

கழகம், இன்னல் பல ஏற்று தத்தளித்த நாட்களிலே

> நேசக் கரம் நீட்டிடாதார்,
>
> கழகத்தின் அமைப்பு முறை ஏற்பட்ட வரலாறு தன்னை அறிந்திடாதார்,
>
> இன்று வளர்ந்துள்ள நிலை கண்டு, பாசம்தனை வருவித்துக்கொண்டு பேசிடுவார்; புது முறைகள் பற்றி.
>
> உடன் இருந்து பணியாற்றிட வர மாட்டார்,
>
> எது செய்தால் என்ன ஆகும் என்ற கணக்குபற்றி ஆய்ந்திடவும் ஒப்பமாட்டார்,

## பொறுக்க முடியாதையா!...

நாணய மதிப்பைக் குறைத்தீர்களே! இந்தத் தேர்தல் முடியும் வரைக்குமாவது இதனைத் தள்ளிவைக்கக் கூடாதா?

**—சுப்பிரமணியத்திடம் காமராசர்.**

நாணய மதிப்பைக் குறைக்காதிருந்தால், இன்னும் ஆறு மாதங்களில் நமது இறக்குமதி முழு அளவுக்குப் பாதித்துவிடும்; திட்டங்கள் பெரிதும் சீர்கெடும் நிலைமை வந்துவிட்டிருக்கும்.

**—பத்திரிகையாளரிடம் நிதியமைச்சர்.**

பொதுமக்களைப் பெரிதும் பாதிக்கப்போகும் இந்த மாற்றத்தை தேர்தல் வரையில்கூட தள்ளிப்போட முடியாத பரிதாப நிலையில் நாடு இருக்கிறது! ஏன் தெரியுமா?

காங்கிரசின் சோஷலிசம் ஐயா, காங்கிரசின் சோஷலிசம்.

ஆனால் நல்ல நல்ல யோசனைகள் தந்திட மட்டும் முனைவார்.

அவர்போன்றார் பேச்சு, பயன் ஏதும் தாராது; மாறாக, ஓஹோ! நாம் நமது கழகமதில் புதுமுறை புகுத்திடாமல் இருந்து வருவது தவறு என்றோர் துடிப்புணர்ச்சி ஏற்பட்டு, ஏதேனும் மாற்றங்கள் திட்டங்கள், முறைகள் தமைப் புகுத்திட முனைந்திடின், நல்லது வந்திடுமோ உள்ளது கெட்டிடுமோ என்பது யாரறிவார்!

பாராட்டுத் தெரிவித்து,பரிவும் காட்டி, பல புதுத் திட்டம் பேசிடும் போக்கினரோ, பொறுப்பேற்றுக் கொள்ளமாட்டார், கழகத்தின் வடிவம் குலைந்தாலும், வலிவு கெட்டாலும் வருந்தவும் செய்யமாட்டார், ஏனெனில் அவர் உழைப்பால் அமைந்தது அல்லவே இக் கழகம்! இதன் உயிர்ப்புச் சக்தி எங்கு உளது, இதன் வளர்ச்சியின் கட்டங்கள் எவையெவை என்பதனை, தூர நின்றுகொண்டிருந்த அவர் எங்கனம் அறிவார்; நீ அறிவாய், உன் உழைப்பைக் கொட்டி உருவாக்கிய கழகம் இது என்பதனால். ஆயினும் உனக்கும் எனக்கும் தம்பி! உற்ற நண்பர்போல நடித்துக் கூறிடுவார் யோசனைகளைப் பொதி பொதியாக! ஏனோ வென்றால், சிற்சிலருக்கேனும், இவ்விதமாகவெல்லாம் கழகம் நடந்திடவேண்டும் என்ற எண்ணம் குடையாதா; குடைச்சல் காரணமாக மனக்குறை வளராதா; மனக்குறை காரணமாகக் கழக வளர்ச்சி குன்றாதா எனும் ஓர் நைப்பாசை. உடனிருந்து, திட்டம் முறை தந்து உழைத்திட முன்வருவோர் என்றால், அவர் பேச்சைப் போற்றிடத்தான்வேண்டும் அப்பேச்சுக்குறித்து நாம் கலந்துரையாடிடத்தான்வேண்டும், பிறகு அதற்கேற்ப செயல்படவும்வேண்டும். தேவை. முறை. நியாயம். ஆனால் உடனிருக்கமாட்டாதார் ஓராயிரம் கூறிடினும், பயன் என்ன? பயன்கூடக்கிடக்கட்டும், கூறுவதன் நோக்கமென்ன? நாம் செய்யும் காரியத்தில் நமக்கே ஓர் மனக்குறை மூட்டிடச் செய்வதற்கு. நன்று அஃது. அல்ல! அல்ல! இதனை அறிந்திடும் தோழர் அணிமிகப்பெரிது. ஆகவேதான், இப்போக்கு கொண்டோரின் முயற்சிகளும் பலிக்கவில்லை!

தம்பி! இலட்சியப் பயணம் வெற்றியுடன் நடைபெறவேண்டுமெனில், அதற்கான பாதை அமைவதுடன், பார்வையைக் கவரத்தக்க சூழ்ச்சிகளின் தன்மையை அறிந்துகொண்டு அவற்றினைத் தவிர்த்திடும் திறனும் பெற்றிடவேண்டும். எனவேதான், உன்னைச் சூழ தூற்றித் திரிந்திடுவோர், இட்டுக்கட்டிப் பேசிடுவோர், வதந்தி கிளப்பிடுவோர், மயக்கமூட்டிடுவோர், பேதம் விளைவிக்க முயற்சிப்போர், தட்டிக்கொடுத்துத் தடுமாறவைத்திடுவோர், ஆகிய பலவேறு இயல்பினர் உள்ளனர் என்பதனை எடுதது்க்காட்டினேன; விழிப்புடன் இருந்திடவேண்டும் என்பதற்காக.

ஆனால் தம்பி! உன்னுடன் இருப்போரும் சாமான்யமானவர்கள் அல்ல. எந்த அரசுக்கும் அடித்தளமாக அமைந்திடுவோர் எவரோ அந்த ஏழையர் உன்னுடன் உள்ளனர்.


ஏஜண்டுகள் தேவை

# மலையாள வைத்தியசாலை

"கிஸ்கோ" (ஜில்லா ஏஜண்ட்) மலையாள பார்மஸியில் தயாராகும் பவர்கூடிய ஆசவ அரிஷ்டங்கள் விற்பனைசெய்ய எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை

உடனே விண்ணப்பிக்க:

State Sole Agent: சுலைமான்

மலையாள வைத்தியசாலை,

நெ. 145, R. S. ரோடு, :: திண்டுக்கல்-3


எதிர்பார்த்து ஏமாற்றமடைந்து உளம் வெதும்பியுள்ள பாட்டாளித் தோழர்கள், உன்னால் தம் குறை தீரும் என்ற நம்பிக்கையுடன் உள்ளனர்.

அவர்களிடம் பொன்னும் பொருளும் இல்லை, அஃதேபோல் பொய்யும் புரட்டும் இல்லை.

அவர்களிடம் உறுதி இருக்கிறது; உள்ளன்பு காட்டுகின்றார்; உன் தொண்டு விரும்புகின்றார்.

கள்ளங் கபடமறியாத நல்லோர்கள் அவராவார். இன்னலைப் போக்கடிக்க இழிவுதனைத் துடைத்திட என்ன வழி என்று கேட்டு நிற்கின்றார் உனக்கு எல்லாத் துணையினையும் தந்திட முனைகின்றார்.

காட்டாட்சி நடாத்திடவே கனவான்கள் முயலுவதும், கனவானின் பேழை பலம் தமக்குண்டு எனும் துணிவால், எதிர்ப்பற்ற ஆட்சியினை அமைத்திடலாம் எனும் நினைப்பால் காங்கிரசார் முனைவதுவும் அவர் அறிவார்.

அஞ்சற்க என்று கூறுகின்றார்; பேச்சுடன் நின்றார் இலலை; ஆதரவு தருகின்றார்.

ஆலைக்கு அரசர்களும் சீமான் சிற்றரசர்களும் புடைசூழ நின்றிடும் நிலை பெற்ற காங்கிரசை எதிர்த்து நிற்கும் சாமானயர்களாம் நமக்கு. வாரி

**பொன்னும் இல்லை, பொருளும் இல்லை, பொய்யும் இல்லை! புரட்டும் இல்லை!!**

# விழிப்பிருந்தால் போதும், வெற்றி உனக்குத்தான்!

வழங்கியுள்ளார் முப்பது இலட்சத்துக்கும் மேலாக ஓட்டுகளை.

உதய சூரியன் எமக்கு ஒளி அளிப்பான், வாழ் வளிப்பான் எமக்கு ஏற்ற சின்னம், இயற்கைச் செல் வச் சின்னம், என்கின்றார்; அறிவாய் நீயும்.

தர்பாரில் இடம் பெற்றார் எந்த 'தகத்தகாயம்' காட்டிடினும் உதய சூரியன் அளிக்கும் ஒளிக்கு நிகரல்ல என்றுரைத்து, திரட்டித் தந்துள்ளார் ஆதரவு பெருமளவு.

இத்தனைக்கும் தம்பி! ஏழெட்டுத் தலைமுறைகள் உண்டு எம் தலைவர்கள் காண்! கோபாலகிருஷ்ணகோக லேயுடன் திலகர், பானர்ஜியுடன் லாலாலஜபதிராயும், வங்கத்துச் சிங்கம் போல் வகை வகையாய் உண் டெமக்கு, பர்டோலி வீரரவர் சர்தார் படேலுடனே, பந்த்துவும் பந்துலுவும் பிரகாசம் பற்பலரும் எம் தலை வர், எல்லோர்க்கும் மேலாக எம்மான் காந்தி உண்டு, எட்டுத் திக்கதனில் புகழ் பரப்பி வந்திட்டார் எமது நேருவுமே; அவர் பாதை நடந்திட்டார் மறைந்த லால் பகதூரும். அவரெல்லாம் அளித்திட்ட வரலாறு எமக் குண்டு என்று காங்கிரசில் இடம் பெற்றோரெல்லாம் இயம்பிடுவதுபோல, நாம் கூறிட வாய்ப்பு இல்லை.

இன்றுள்ள காங்கிரசார் — இல்லை, இல்லை—இன் றைய காங்கிரசில் உள்ளோர்கள்—பண்டைப் பெரு மையினை, பாங்கு மிகு வரலாற்று சிறப்பதனைக் காட் டிக் கண்சிமிட்டி உள்ளம் கவர முனைகின்றார்.

> நாமோ, வல்லோர்கள் சமைத்தளித்த வரலாற்றின் மீது நின்று, எத்தனை உயரம் நாங்கள் பாரீர் என்று கூறிடவில்லை. ஆனால் வரலாறு சமைக்கின்றோம்.

ஏழெட்டு தலைமுறைகள் பெற்றளித்த பெருநிதி யால் பொலிவு பெறுகின்றார், இன்றுள்ள காங்கிரசார்; பொலிவினை அழித்தும் வருகின்றார். நாமோ, புதிய தோர் காலம்தன்னை உருவாக்கி வருகின்றோம்.

தியாகம் பல செய்து சுதந்திரஜோதி கண்டார் பெரியோர் — இன்று அதனைப் பயன்படுத்தி வெளிச் சம் போட்டு உலவுகின்றார் காங்கிரசில் இன்றுள்ளார். நாமோ, தியாகத் தீயினிலே நிற்கின்றோம் தொடர்ச்சி யாக.

எனவேதான், பழங்கதை பேசுவோர் பக்கம் நின் றிடாமல், பணியாற்றிடும் நமக்குப் பக்கபலம் தந்தி டவே திரண்டு வருகின்றார், ஏழையர் எல்லோரும்.

நமக்குள்ள வலிவினையும் நமைக்கெடுக்க நினைப் போர்கள் செயும் முறையும் எடுத்துக் கூறிவிட்டேன்; இக்கணக்கை ஆய்ந்து பார்த்திடுவாயேல், விழிப்பு தேவை, அஃதேபோல் வெற்றி நம்பக்கம் எனும் நம் பிக்கை கொண்டிடவும் வாய்ப்பு உண்டு என்பதையும் உணர்ந்திடுவாய்; உணர்ந்ததனை நான் உரைத்தேன்.

பயணம் — பாதை — பக்கம் உள்ளோர்—பாழ் படுத்த முனைவோர்கள்—இவை யாவும் காட்டுவதன் நோக்கம் தம்பி! தெளிவுடன் தொடர்ந்து நம் பணி தன்னைச் செய்திடத்தான்.

உனைச் சூழ உள்ளோரின் உள்ளம் அறிந்திடு வாய், அவர் முறையும் தெரிந்துள்ளாய்.

உன்னுடன் உள்ளோர்கள் உளம் அறிவாய்; அவர் உள்ளன்பும் தெரிந்துள்ளாய்.

ஆகவே உவகை கலந்ததொரு உறுதியுடன், விழிப்புடன், ஏறு! முன்னேறு! ஏறே! நீ முன்னேறு! முன்னேற்றப்பாதையிலே நடைபோடும் நல்லோனே! நாடு உன்னிடம் எதிர்பார்ப்பது நிரம்ப. அதற்கேற்ற தன்மையுடன் தொண்டாற்றிட முனைவாய். அந்தத் தொண்டுபுரிந்திடுவோர் ஆயிரவர், ஆயிரவர்! பேரூரில் சிற்றூரில் வாழ்கின்ற உழைப்பாளர்; ஏர்பிடிப்போர், சீர் அளிப்போர், உன் தோழர்! வருகின்றார் அவரெல் லாம்; மாநாடு மாண்புபெற.

நத்திப் பிழைத்திடாத நல்லோர்கள் வந்திடுவார்!

கத்தும் கடல் அடக்கி கலம்விட்ட முன்னோரின் 'மரபு' இதுவென அறிந்து, மார்தட்டி நிற்போர்கள், மறவர் வருகின்றார் மாநாடு மேன்மைபெற.

அரசியல் சதுரங்கம் ஆடுவோர் அல்ல நாங்கள்; அன்னைத் திருநாட்டின் வாழ்வு வளம் பெற்றிடவே எமதுயிரும் ஈந்திடும் வீரர்குழாம் யாமென்று கூறிப் பவனிவரும் குன்றனைய நெடுந்தோளர் வருகின்றார், நீடுபுகழ்த் திருச்சிப் பதிதன்னில் திரண்டிடும் தீரருட னிருக்க.

மாநாடு திருச்சியிலே; மணம் எழும் தமிழகமெங் கணுமே. எழிலார்ந்த அம்மாநாட்டில், இன்ப ஒளி கண்டிடலாம்.

எமதூரில் இது நிலைமை; மாற்றார் மருள்கின்றார், வெற்றி எமக்கே என்று பல்வேறு பக்கம் வாழ்வோர் கள் பேசிடுவர்; அந்தப் பாகு பருகிடவே, வந்திடுவாய் தம்பி! உன் உடன் பிறப்பு புடைசூழ.

## திட்டமும், தெளிவும்?

ரூபாயின் மதிப்பைக் குறைப்பதற்கு, இந்த அரசு கூறுகிற காரணங்களை நாட்டு மக்கள் ஒப் புக்கொள்ளமாட்டார்கள் என்று அஞ்சுகிறேன்.

கடந்த 12 திங்களில் வாழ்க்கைச் செலவும் மிக மிக மோசமாக உயர்ந்து வந்திருக்கிறது.

இப்போது நாணய மதிப்புக் குறைப்பால் ஏற்படுத்தியுள்ள புதிய பணவீக்க நெருக்கடி யாலும், இறக்குமதியாகும் எல்லா பொருள் களின் விலையுயர்வுகளாலும் வாழ்க்கைச் செலவு மேலும் மேலும் உயரும்.

-என்கிறார் பொருளாதார நிபுணர் **லோகநாதன்.**

## எங்கே தெரியுமா?

"ஆளுங்கட்சியாக இருக்கிற காங்கிரசுக்கு **சோஷியலிசம்** என்ற **தெளிவான, திட்டமான** இலட் சியம் இருப்பதால்தான் அதை முன்னிறுத்தி வாக்காளர்களைச் சந்திக்க **காங்கிரஸ் துணிவுடன் முன்வருகிறது**" என்று பெரியார்கூறும் காங்கிர சின் ஆட்சியில்!!

# கொடுமைதனை வீழ்த்தவல்ல கூர்வாளேவா! இருட்டறிவைப் போசுக்கின்ற ஒளிவிளக்கேவா!!

ஆங்காங்கு நம் கழகக் கோட்டைகள் அமைந்த விதம் பாங்காக எடுத்துரைப்பார்; பழச் சாறாக இனிக்கும் அச்சேதியுந்தான்.

இன்ன தொகுதியிலே இன்றிந்த நிலைமை தோழா! இன்னாரின் 'இருப்பு' இல்லாது போயினதால், இழுக்கப் பார்க்கின்றார் இன்னொரு பெரும் புள்ளியினை என்ற விவரம் பேசிடுவர், நாட்டு நிலை உணர்ந்திடலாம்.

ஆங்காங்கு தாம் சென்று ஆற்றிய உரை கேட்ட மக்கள் கொண்டுள்ள உணர்ச்சியின் வேகமதை பேச்சாளர் எடுத்துரைப்பார்; பார்த்திடுவாய் தமிழகந் தன்னை.

ஆட்சி முறை தன்னின் இலக்கணமும், அது வழுவியதால் இன்றுள்ள ஆளவந்தார் தந்துள்ள அவதியதும், கூறிடுவர் நம் தோழர். கூர்த்த மதி படைத்தோர்; கருத்துக்கு விருந்தாகும்; பெற்றிடவே வந்திடுவாய்; பெறட்டும் மற்றவரும், உடன் அழைத்து வந்திடுவாய்.

கன்னலின் சுவையன்றோ, காவிய நடையன்றோ, பூங்காற்று வீசுதன்றோ, புல்லரைச் சாய்க்கவல்ல புயலன்றோ என்றெல்லாம் சொலத்தக்க உரையாற்றி, உள்ளம்தனில் உவகை ஊட்டி, உறுதியினை மேன்மையாக்க வருகின்றார் கழகமதன் காவலர்கள்; காண்பாய், தம்பி! கண் குளிர!!

எங்குள்ளோம், எவ்வாறுள்ளோம், எத்தகைய திறனதனைப் பெற்றுள்ளோம், எந்த நிலை உளது நம் அணிவகுப்பு, என்பதெல்லாம் கண்டிடவே மாநாடு; அறிவாயே அதனை 'அரிமா நோக்கு' என நாவலர் கூறியதை; வா! வா! தம்பி! உன் வருகை, மாநாட்டின் நிலை உயர்த்தும், நம் நோக்கம் ஈடேற வழி அமைக்கும்; மாற்றார்க்கு நாம் யார் என்பதனை எடுத்துக் காட்டும்.

கருத்துக்கு விருந்து உண்டு என்றேன்; தம்பி! இசையும் உண்டு! கூத்து உண்டு! இவற்றினுக்கும் மேலாக, நாம் காண விரும்பும் எதிர்கால ஓவியத்தைக் கண்டிடவும் வாய்ப்பு உண்டு.

தமிழர் விரும்பிடும் ஓர் நல்லாட்சி எது என்றும், அந்த நல்லாட்சி அமைத்திடவே யாது செய்திடல் வேண்டுமென்றும், கூறிடும் உரிமை பெற்றோய்! கொடுமைதனை வீழ்த்தவல்ல கூர்வாளே! குருட்டறிவைப் பொசுக்குகின்ற ஒளிவிளக்கே! உன்னைக் காண, வழிமீது விழிவைத்து நிற்கின்றேன்; அறிவாய் நீயும்.

மாநாட்டில் வந்தமரும் மாத்தமிழர் முகமதனை, கண்டிடும் பேறு பெற்றிட்ட போதினிலே, மாற்றார்கள் குவித்துள்ள மாநிதியும் கடுகாகத் தோன்றிவிடும்; மனம் திறந்து நீ பேசிடினோ, அவர் மூட்டும் சூழ்ச்சியெலாம் தூளாகிப் போகும், தூற்றல் தூசு ஆகிப் போகும்; தூய தொண்டுதனை நல்க தொகை தொகையாய் இருக்கின்றார் உடன்பிறந்தார் என்பதறிந்த உடன், உள்ளத்தில் ஓர் எழுச்சி தோன்றும்; வீரம் பொங்கும்.

**"உண்மை! இது உண்மை! உயிரனையீர்!**
**நெஞ்சத்தில் திண்மை இருந்தால்தான் வெற்றிச்**
**சுடர் தெரியும்! சாவா? சந்திப்போம்; வாழ்க்கை**
**நமக்கென்ன பூவா?**

**புறப்படுவோம்; புல்லியரைத் தூள் செய்**
**வோம்,"**

என்ற முழக்கமிட்டுக் கிளம்பினரே நம் தோழர், இன் தமிழைக் காத்திட. என்னானார்! பசி தீர்க்கப் பயன்பட்டார், பக்தவத்சலனார் ஆட்சி தன்னில் வாய் திறந்து காட்டிற்றே துப்பாக்கி, அதன் பசி தன்னை.

மொழிக் கிளர்ச்சி நடாத்தியதில், மொய்குழலாள் வீழ்ந்தழவே, வீழ்ந்தனர் வீரர் பலர்.

நடை அழகும் நா நல அழகும் பெற்றோன் நான் பெற்ற திருமகனும் என்று பூரித்துக் கிடந்த தாய் காதில் போட்டனர், சுட்டார் ஆளவந்தார்! சுருண்டு வீழ்ந்தான் உன் மகனும்! செத்தான் ஒருவன், மற்றவர் எங்கே எனக் கொக்கரித்தார் கொடியோர் எனும் சேதியினை.

அன்னை மொழி காத்திடவே ஆற்றலற்று நானிருந்திடப் போவதில்லை, என்னையே நான் தீயிலிட்டு இறந்துபடுகின்றேன், மறந்திடாதீர் என்னை; தமிழ் வாழச் சாகின்றேன்; சாக விட்டிடாதீர் நம் தமிழை என்று செப்பினர், சிங்கத் தமிழர் சிலர். சிந்தினோம் கண்ணீர்; வேறென்ன செய்தோம்.

எங்கும் அடக்குமுறை! என்றும் நடந்தறியா பயங்கரங்கள். எல்லாம் தமிழ் தனக்கு இடர்வந்துற்றதுவே என்ற ஏக்கம் காரணமாக.

அவர்கள் அளித்திட்டார் தம் இன்னுயிரை! நாம்?

திரண்டெழுந்து நின்றேனும், போனவர்போக, மிச்சம் உள்ளோம் காண், பெருவெள்ளம்! இந்தியைத் தீயாக்கி இன் தமிழை அழித்திடவே இயலாது அறிந்திடுவீர்! என்றேனும் எடுத்தியம்பவேண்டாமோ, இறந்துபட்ட இணையற்ற வீர்தம் மரபினரே நாம் என்பதனை மறக்கப்போமோ!

அந்தப் பெரும் கிளர்ச்சிக்குப் பிறகு, தம்பி! முதன் முறையாய்க்கூடுகின்றோம் திருச்சி மாநாட்டில்; உணர்கின்றாயா அதன் பொருளை!

தமிழ் எந்தன் உயிர் என்போர், உரிமைகாக்க உலை நெருப்பிலும் வீழ்வேன் எனும் உறுதி பூண்டோர், நாட்டினில் ஏற்புடைய ஆட்சியது அமைந்தாலன்றி ஏழையர்க்கு வாழ்வில்லை, இன்பம் இல்லை எனும் உண்மைதனை உணர்ந்தோர் வருகின்றார். எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்திடோம், விளைந்த காட்டுக் குருவியாகிட ஒருப்படோம், தமிழர் காணீர்! என்று இயம்பிடுகின்றாய், தம்பி! செந்தேன் பாய்கிறது என் செவியில். உன்போல் உள்ளோர்கள் தொகை தன்னை ஒரே இடத்தில் காண்பதற்கு, என்போலத் துடித்தபடி உள்ளோர் பலர். எனவே எழு ஞாயிறே! **வந்திடு! ஒளி தந்திடு!** திருச்சி அழைக்கிறது தீந்தமிழின் சுவைக்கு நிகர் இயல்பினனே! நானும் அழைக்கின்றேன்; வந்திடு! ஒளி தந்திடு!

**அண்ணன்,**

அண்ணாதுரை

**4-ம் பக்கத் தொடர்ச்சி**

வைக் குலசேகரன் கொன்ருன்; ஆகவே அவனை நாம் கொல்லவேண்டும்—எவ்வளவு சுலபமான முறை! நாய்கள் சண்டை போட்டுக் கொள்வதை நீ பார்த்திருப்பாய்! ஒரு நாய் கடிக்கும்—மற்ருெரு நாய் அதைத் திருப்பிக் கடிக்கும்! இப்படி ஒன்றை ஒன்று மாறி மாறிக் கடித்துக்கொண்டே இருக்கும்—மனிதன் எவனுவது கல்லால் அடித்து அவைகளைத் துரத்தும் வரைக்கும்! ஒருவன் அடித்தால், உடனே மற்ருெருவன் திருப்பியடித்தால், நாய்க்கும் அந்த மனிதனுக்கும் என்ன வித்தியாசம்—சொல் பார்க்கலாம்!''

'புத்தரின் உபதேச மொழிகள் ஒரு முறை அல்ல, இரண்டு முறைகள் அல்ல—ஆயிரம் முறைகளுக்கு மேல் படித்திருக்கிறேன்; தங்களைப் போன்ற பெரியார்களின் அறிவுரைகளையும் எவ்வளவோ கேட்டிருக்கிறேன்! வள்ளுவன் தந்த அறிவுக் கனியை வாயார உண்டிருக்கிறேன்! இன்னு செய்தாரை என்ன செய்ய வேண்டுமென்று, அந்தஉலகப்பெரியார் கூறியது, என் உள்ளத்தை விட்டு அகலாமல்தான் இருக்கிறது! ஆனுல் இந்தக் குலசேகரன் ஒருவனைப் பொறுத்தமட்டில்—படித்தவை, கேட்டவை சகலவற்றையும் மறந்துவிட முடிவு செய்துவிட்டேன்! அவன் அவ்வளவு பெரிய துரோகி!'' என்று குலசேகரன் பார்வையை அஞ்சலை பக்கம் திருப்பினுன்.

“அவ்வளவு பெரிய துரோகியை மன்னிப்பதில்தான் இருக்கிறது, மனிதப் பண்பு''! என்று அஞ்சலை உறுதியான குரலில் சொல்லிவிட்டு, அடிகளைப் பார்த்தாள்.

“பூஞ்சோலை! பராக்கிரமபாகு எப்படியும் மதுரைமீது படையெடுக்க வேண்டுமென்று பதைக்கிருன்! அவனுக்கும் குலசேகரனுக்கும் சொந்த பகை உண்டு! அது உனக்குத் தெரியாதது அல்ல. அவனது தளபதிகள் இருவரின் தலைகள் இன்னமும், மதுரை கோட்டைச் சுவர்களின்மீது இருக்கின்றன. அந்த ஆத்திரமும் அவமானமும் அவனை இரத்த வெறியனுக மாற்றிவிட்டிருக்கிறது. பௌத்தர்கள் கொள்ளப்படுகிருர்கள். ஆகவே படையெடுக்க வேண்டுமென்று அவன் கூறுகிருன்! அந்தக் காரணத்தைத்தான் நான்மறுக்கிறேன்! பௌத்தத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு, போர்க்களம் அமைப்பதும், வீரர்களை வெட்டிச் சாய்ப்பதும், இரத்தச்சந்தியில் புத்தர் வாழ்க என்ற முழக்கத்தோடு நடந்து செல்வதும் — அடாது கூடாது என்று நான் கண்டிக்கிறேன்! நான் ஒருவன் கண்டித்தால் மட்டும், அந்த எண்ணத்தை அவன் விட்டுவிடுவானு? ஆகவே இந்த ஊரிலேயே இன்னும் ஒரு வாரத்திற்குமேல் தங்கியிருக்கலாதென்று நினைக்கிறேன். தவருன வழியில் செல்லும் பௌத்த துறவிகளை முதலில் மாற்றியாக வேண்டும்! அதன் பிறகே உன்னைப் போன்ற உணர்ச்சிக்கு அடிமையான வாலிபர்களின் உள்ளத்தை மாற்றவேண்டும்! எப்படியும் இலங்கை அரசனது ஆசை நிறைவேருதபடி செய்ய வேண்டும்! பாண்டிய நாட்டை அவனது விளையாட்டுச் சாலையாக்கிக் கொள்ள நினைத்திருக்கிருன். அந்த நினைப்பு நிறைவேருதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்! அந்தப் பணிக்காகவே, இங்கு ஒரு வாரம் தங்க முடிவு செய்திருக்கிறேன்!'' என்று கூறிய அறிவொளி அடிகளுக்கு மனதிற்குள்ளேயே குலசேகரன் வணக்கம் கூறிக்கொண்டான்.

“பொய் இருக்கிறதே தம்பி, அது மிகவும் பொல்லாதது! முதலில் அதனுல் ஏதோ நன்மை ஏற்படுவதைப்போலத்தான் இருக்கும்; கடைசியில் ஆபத்தில் கொண்டு போய்ச் சொருகிவிடும்'' என்று சொல்லிக்கொண்டே அடிகள் எழுந்திருந்தார்.

சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் திடீரென்று பொய்யைப் பற்றி எதற்காக அடிகள் கூறுகிருர் என்பது விளங்காமல் குலசேகரனும் அஞ்சலையும் எழுந்தனர்.

“தம்பி'' சூரியன் மறைந்துவிட்டான் போகலாம்.''

அவர்கள் பேசிக்கொண்டே ஊரை நோக்கி நடந்தனர்.

“குலசேகரனை எப்படியும் கொன்று, அவனது தலையை எடுத்துச் சென்று இலங்கைக் கோட்டை மதில்மீது வைக்கவேண்டுமென்பதில், பராக்கிரமபாகு அதிதீவிரமாக இருக்கிருனும். தனக்கு உதவி செய்யும்படி, மதுரையிலுள்ள சில பெரிய மனிதர்களுக்கு அவன் ஓலை எழுதியிருப்பதாகவும் சொல்கிருர்கள்.''

“உண்மையாகவா?''

“இதிலென்ன தம்பி ஆச்சரியமிருக்கிறது! குலசேகரனுக்கு மிகவும் வேண்டியவர்களைக்கூட ஆசை வார்த்தைகளால் இழுத்துவிட முடியுமே! குரைக்கின்ற நாய்க்கு எலும்புத்துண்டு போடுவதுபோல, நான் வெற்றி பெற்ருல் இந்தந்த ஊர்களை உனக்கு இனுமாகத் தந்துவிடுகிறேன் என்று தித்திப்புக் காட்டினுல், எத்தனையோ பேர் துரோகிகளாக மாறுவார்கள் தம்பி.''

ஊரின் கோடியிலிருந்த குளக் கரையை அவர்கள் அடைந்தபோது வானத்தில் நிலவு ஒளிசெய்ய ஆரம்பித்துவிட்டது.

“மேட்டுத் தெருவில் **சங்கம்மாள்** என்ெருரு கிழவியிருக்கிருள், அவள் வீட்டில்தான் நாங்கள் தங்கியிருக்கிருேம். தடையில்லை என்ருல் நீயும் எங்களோடு வரலாம்.''

“எனக்காகப் புத்தவிகாரத்தில் சுவடியடிகள் காத்திருப்பார். நாளை காலைவந்து உங்களைப் பார்க்கிறேன் என்று குலசேகரன் சொல்லியதும் அவனை விட்டுப்பிரிந்து அறிவொளி அடிகளும் அஞ்சலையும் தனியே சென்றனர்.

சிறிது தூரம் சென்றதும், அஞ்சலை 'அப்பா' என்ருள்.



"என்ன அம்மா?" என்று அறிவொளி அடிகள் அவளைத் திரும்பிப் பார்த்தார்.

"நானொரு தவறு செய்துவிட்டேனப்பா" என்று கண்கலங்க அவர் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

"தவறு? நீயா செய்தாய்?"

"ஆமாம், அப்பா! பொய்சொன்னேன் தங்களிடம்!"

"அழாதே குழந்தாய்!"

"என்னை மன்னிப்பதாகச் சொல்லுங்கள்!"

"பொய் சொன்னதாகச் சொன்னாயே ஒழிய, அது என்னவென்று சொல்லவில்லையே, அஞ்சலை?"

"இல்வளவுநேரம் நம்மிடம் பேசினாரே......"

"ஆமாம் பூஞ்சோலை!"

"அவரது உண்மையான பெயர் வேறு, அப்பா! மாறுவேடத்திலேயே அவர் இருக்கிறார்!"

'ஓகோ! அப்பொழுது நான் முதலில் சந்தேகப்பட்டது சரியாகப் போய்விட்டது என்று சொல்!'

சந்தேகப்பட்டீர்களா — என்னவென்று!'

'புத்த விகாரத்தில் அவன் பேசியதைக் கேட்டதும், ஒருவேளை இவன் குலசேகரனின் கையாளாக இருப்பானோ என்ற ஐயம் உண்டாயிற்று! அது அர்த்தமற்ற சந்தேகம் என்று அப்பொழுது நினைத்தேன்!'

'அவர் குலசேகரனின் கையாள் அல்ல?'

'வேறு!'

'மதுரை மன்னரேதான் அப்படி மாறுவேடத்தில் இங்கு வந்திருக்கிறார்!'

'என்ன?'

"ஆமாம், அப்பா!'

ஆச்சரியத்தால், அடிகளால் சிறிதுநேரம் பேசமுடியாமல் போயிற்று.

### முகப்பில் காண்கிறீர்

கடல்மடை உடைபடல் போலென
காளையர் பெரும்படை சீரென
நடைபயில் திருசிரை தன்னிலே
நடைபெறு பெரும்பே ரணியதன்

தடையுடைத் தானைத் தலைவனும்
தமிழ்த்தீஞ் சுவைஅன் பழகனும்
கடையவர் காழ்ப்பிலுங் கண்ணியம்
காட்டிடும் அண்ணா மலையுமே

முகப்புடைக் 'காஞ்சி'யில் காண்கிறீர்
முத்துடைப் பந்தரில் கூடுவீர்!
அகப்புறம் தூயதொண் டேற்றுளீர்!!
அவ்வழி அனைவரும் ஆற்றுவீர்!!

மாறுவேடத்திலிருப்பவன் குலசேகரன்தான் என்பதைப் புத்த விகாரத்திலேயே தான் தெரிந்து கொண்டதையும், ஆகவே அவனைப் பின்தொடர்ந்ததையும், பேசிய விவரங்களையும் அவள் சொன்னாள்.

[ வளரும் ]

தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குவது

ஜெயா பார்மஸி H.O. பெரியகுளம்

சர்க்காரால் அங்கீகாரம் செய்யப்பட்டது.

(Recognised by Central Board of Indigenous Madicine Madras)




பொதுமக்கள் ஏமாற்றமடையாதிருக்க, எங்களது மருந்துகளை வாங்கும்போது, ஜெயா பார்மஸி H.O. பெரியகுளம் என்பதையும் லேபிளில் உள்ள முத்திரையையும் கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

JEYA

பிராஞ்சுகள்:

51, Dr நடேசன் ரோடு, சென்னை-5.
51, செஞ்சி ரோடு, திண்டிவனம்.
17, நெல்கடைத் தெரு, மாயவரம்.
2 வள்ளிமால் தெரு (சிங்காரத்தோப்பு எதிர்)
பெரியகடைவீதி, திருச்சி-8.

28 நெத்திமேடு, கோயம்புத்தூர் ரோடு, சேலம்-2
208 ஒப்பணக்காரத்தெரு கோயம்புத்தூர்
63, மார்ககட் ரோடு, தஞ்சாவூர்.
47A, கன்னமமாள்கோயில்தெரு திருநெல்வேலி ஜங்.
மற்றும் தமிழகமெங்கும் ஏஜண்டுகள்.

புதிதாக ஏஜன்ஸி வேண்டுவோர், தலைமை நிலையத்திற்கோ, பிராஞ்சிற்கோ விண்ணப்பிக்கவும்.

உரிமையாளர்: J. M. ராஜன், ஜெயா பார்மஸி, மதுரைரோடு திண்டுக்கல்.
போன்: 348, 348-A, 438.

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.